# குடியியற் கல்வி

## ஆசிரியர் வழிகாட்டி

(2015 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது)

## தரம் 6



சமூக விஞ்ஞானத்துறை
தேசிய கல்வி நிறுவகம்
ஸ்ரீலங்கா
வலைகடப்பிடம் : www.nie.lk

# குடியியற் கல்வி

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் 6

**(2015 ஆம் ஆண்டிலிருந்து அமுல்படுத்துவதற்கானது)**


சமூக விஞ்ஞானத்துறை
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
ஸ்ரீலங்கா

இணையத்தளம்: www.nie.lk    மின்னஞ்சல் : info@nie.lk

**குடியியற் கல்வி**
தரம் - 6
ஆசிரியர் வழிகாட்டி

முதற் பதிப்பு: 2014

© தேசிய கல்வி நிறுவகம்
ISBN

சமூக விஞ்ஞானத்துறை
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
இணையத்தளம் : www.nie.lk
மின்னஞ்சல்: info@nie.lk

***பதிப்பு :***
***பதிப்பகம்***
தேசிய கல்வி நிறுவகம்

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

இலங்கையின் இடைநிலைக் கல்வியில் புதிய தேர்ச்சி மையப் பாடத்திட்டத்தின் முதற் கட்டம் 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. எட்டு ஆண்டுகளுக்கொருமுறை மேற்கொள்ளப்படும் கலைத்திட்ட மறுசீரமைப்பின் மூலம் இது அறிமுகப்படுத்தப்பட்டது. தேசிய மட்டத் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கின் அடிப்படையில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கமைய அப்போது நடைமுறையிலிருந்த உள்ளடக்கம் சார்ந்த கல்வி முறைமை இதன் மூலம் மாற்றியமைக்கப்பட்டது.

தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தின் இரண்டாம் கட்ட மறுசீரமைப்பானது 2015ஆம் ஆண்டிலிருந்து தரம் 6, 10 ஆகிய வகுப்புக்களுக்கு அமுல்படுத்தப்படவுள்ளது. இந் நோக்கத்தை அடையும் பொருட்டுத் தேசிய கல்வி நிறுவகம் ஆய்வை அடிப்படையாகக் கொண்ட பேறுகளையும் ஆர்வலர்களுடைய பல்வேறு ஆலோசனைகளையும் பலதரப்பட்டவர் களிடமிருந்தும் பெற்றுக்கொண்டது. அவற்றின் அடிப்படையில் நியாயப்படுத்தப்பட்டதொரு செயன்முறையை அறிமுகப்படுத்தியதுடன் அதற்கமைவான பாடத்திட்டங்களையும் மேற்படி தரங்களுக்காக விருத்தி செய்துள்ளது.

இந்த நியாயப்படுத்தற் செயன்முறையிற் கலைத்திட்ட மறுசீரமைப்பின் போது நிலைக்குத்தான ஒருங்கிணைப்பு முறை பயன்படுத்தப்பட்டு, கீழிருந்து மேல்நோக்கிய அணுகுமுறையில் அனைத்து பாடங்களுக்குமான தேர்ச்சி மட்டங்கள் முறைமையாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும்,அடிப்படை விடயங்களிலிருந்து உயர் மட்டத்தை நோக்கிச் செல்லும் வகையில் அவை ஒழுங்குபடுத்தப்பட்டும் உள்ளன. பாட உள்ளடக்கத்திற் காணப்படும் கூறியது கூறல் மற்றும் பாட உள்ளடக்கச் சுமை என்பவற்றை இழிநிலைக்கு இட்டுச் செல்லவும் மாணவர் நேயமானதும் நடைமுறைக்கேற்றதுமான கலைத்திட்டமொன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கவும் பாடத்தைத் திட்டமிடவும் கற்பிக்கவும் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் அளவீடு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளவும் உதவுமுகமாக ஆசிரியர் வழிகாட்டியிற் புதிய வடிவமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ் வழிகாட்டல்கள் ஆசிரியர்கள் வகுப்பறையில் மென்மேலும் உற்பத்தித் திறனுள்ளதும் விளைதிறன் மிக்கதுமான வகையிற் துலங்குவதற்கு உதவும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் மாணவர்களது தேர்ச்சிகளை விருத்தி செய்யும் வகையிற் தர உள்ளீடுகளையும் மேலதிக செயற்பாடுகளையும் தெரிவு செய்வதில் ஆசிரியர்களுக்குச் சுதந்திரத்தை வழங்கியுள்ளது. இப்புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் பாட உள்ளடக்கச் சுமையை விடுத்து, விதந்துரைக்கப்பட்ட பாடநூல்களின் மூலம் பாட உள்ளடக்கத்தைப் பூரணப் படுத்தியுள்ளது. ஆகவே, ஆசிரியர்கள் புதிய ஆசிரியர் வழிகாட்டிகளைப் பயன்படுத்தும் அதேவேளை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினாற் தயாரிக்கப்பட்ட பாடநூல்களையும் பொருத்தமான வகையிற் பயன்படுத்துதல் வேண்டும்.

ஆசிரியர் மையக் கல்வி முறைமையிலிருந்து மாணவர் மையக் கல்வி முறைமைக்குத் தளமாற்றம் செய்வதும் வேலையுலகிற்கு ஏற்ற வகையிற் பொருத்தமான மனித வளங்களை விருத்தி செய்வதும் தேவையான தேர்ச்சிகளையும் திறன்களையும் பாடசாலையிலிருந்து வெளியேறும் மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான செயற்பாடு சார்ந்த கல்வி முறைமையை விருத்தி செய்வதும் மேற்படி நியாயப்படுத்தப்பட்ட பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் வழிகாட்டியின் புதிய வடிவமைப்பு என்பவற்றின் அடிப்படை நோக்கங்களாகும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டியை உருவாக்குவதிற் பங்களிப்புச் செய்த தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விசார் அலுவல்கள் சபை மற்றும் பேரவை உறுப்பினர்களுக்கும் அனைத்து வளவாளர் களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகின்றன.

**பணிப்பாளர் நாயகம்**
தேசிய கல்வி நிறுவகம்

## பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்தி புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காக பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையில் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் இணைத்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருமுறை இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையை தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாக பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்கும் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்கும் கற்றல் கற்பித்தல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூட பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பாக மதிப்பீடு நடத்தும், தேசிய மட்ட பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்படும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதிசெய்து கொடுப்பவர்களால் மதிப்பிடல் வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**பிரதிப் பணிப்பாளர் நாயகம்**
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

## வளவாளர்கள்

**வழிகாட்டலும் அனுமதியும்** : கல்விசார் அலுவல்கள் சபை,
தேசிய கல்வி நிறுவகம்

**ஒருங்கிணைப்பு** : திரு. ஏ.எல்.எஸ். அபேவிக்ரம
சிரேஷ்ட விரிவுரையாளர், சமூக விஞ்ஞானத்துறை

**வெளிவாரி பங்களிப்பு** : திரு. சீ.எஸ். ஜயசிங்ஹ
ஆசிரியர் நிலைய முகாமையாளர் (ஓய்வு பெற்ற)
ஹொரண

திரு.எம்.கே.கே.கிங்ஸ்லி பிரியந்த,
விரிவுரையாளர், உருகுணை தேசிய கல்விக் கல்லூரி

திருமதி. சோமவதி
ஆசிரியர் ஆலோசகர் (ஓய்வுபெற்ற) புளத்சிங்ஹ

திருமதி. பீ.பீ. மாளிகா
ஆசிரியர் ஆலோசகர் (ஓய்வுபெற்ற) அம்பாந்தோட்டை

திரு.எம்.ஏ.ஏ.ஏ.பீ.மல்லவராச்சி
ஆசிரியர் ஆலோசகர். நிக்கவரெட்டிய

திரு.ஜே.எம்.எம்.ஜயசுந்தர,

ஆசிரிய ஆலோசகர். நிக்கவரெட்டிய
திரு.கே.ஏ.என்.புஷ்பகுமார
ஆசிரியர் சேவை, பொலேகொட ம.வி. மஹகம

**உள்வாரி வளப்பங்களிப்பு** : திரு. ஏ.எல்.எஸ். அபேவிக்ரம
சிரேஷ்ட விரிவுரையாளர், சமூக விஞ்ஞானத்துறை

திருமதி. எஸ்.யூ.அய்.கே. த சில்வா
விரிவுரையாளர், சமூக விஞ்ஞானத்துறை

திரு. எஸ். கருணாகரன், விரிவுரையாளர்
சமூக விஞ்ஞானத்துறை

**சிறப்பு நிபுணத்துவ ஒத்துழைப்பு**

கலாநிதி ஷாமிந்த வனசிங்ஹ,
விரிவுரையாளர்,
கல்விபீடம், திறந்த பல்கலைக்கழகம்

திருமதி. வசந்தா செனவிரத்ன, சிரேஷ்ட விரிவுரையாளர்
சட்டபீடம், கொழும்பு பல்கலைக்கழகம்

சட்டத்தரணி மௌனி பஹக்கார, ஒருங்கிணைப்பாளர்
மனித உரிமைக் கற்கை நிலையம்
சட்டபீடம், கொழும்பு பல்கலைக்கழகம்

**மொழிச் செவ்விதாக்கம்**

திரு. எஸ். கருணாகரன், விரிவுரையாளர்
சமூக விஞ்ஞானத்துறை

# ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்

2007 ஆம் ஆண்டிலிருந்து 6-9 ஆம் தரங்களில் நடைமுறையிலிருந்த வாழ்க்கைத் தேர்ச்சிகளும் குடியியற் கல்வியும் பாடம் இரண்டு பகுதிகளைக் கொண்டிருந்தது. அதற்கமைய பகுதி I வாழ்க்கைத் தேர்ச்சிகளும் பகுதி II குடியுரிமைக் கல்வி எனும் பெயரையும் கொண்டிருந்தது.

இப்பாடம் பாடசாலை மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் போது பாடப்பரப்பு இரண்டு பகுதிகளைக் கொண்டிருந்தமையால், கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் நடைமுறைப் பிரச்சினைகள் ஏற்பட்டன. இது தொடர்பில் பாட நிபுணர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவர்களாலும் முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டதாக ஆய்வு முடிவுகளிலிருந்து தெரியவந்துள்ளது. மேற்படி விடயங்களைக் கருத்திற் கொண்டு குடியியற் கல்வி எனும் பாடப்பெயரில் தனியொரு பாடமாக 2015 இலிருந்து நடைமுறைப்படுத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இதன் போது 6-9 தரங்களில் உள்ளடக்கப்பட்டிருந்த வாழ்க்கைத் தேர்ச்சி பாட எண்ணக்கருக்கள் குடியியற் கல்விப் பாடபரப்புடன் பொருத்தப்பாடு கருதி உரிய இடங்களில் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன. இதற்கமைய கற்றல் - கற்பித்தல், மதிப்பீட்டுச் செயன்முறைகளை மென்மேலும் இலகுவான முறையில் நிறைவேற்றவும் பாடநோக்கம் நிறைவேறும் வண்ணமும் விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஆகவே 2015 இலிருந்து நடைமுறைக்குவரும் குடியியற் கல்விப்பாடமானது தரம் 6- 11 வரையில் தனியொரு பாடமாக நடைமுறைப்படுத்தப்படும். இதன்போது தரம் 6-9 வரை தரம் 10 - 11 வரையில் மூன்று பாடவேளைகளும் இப்பாடத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ளன.

தரம் 6 இற்கான இவ்வாசிரியர் கைந்நூலைப் பயன்படுத்துகையில் ஒவ்வொரு தேர்ச்சிக்கும் தேர்ச்சி மட்டங்களுக்கும் ஏற்பட முன்வைக்கப்பட்டுள்ள கற்றல் செயன்முறை இடம்பெறல் வேண்டும். இதன்பொருட்டு பாடத்தைத் திட்டமிடும் போது உள்ளடக்கப்பட வேண்டிய பாடவிடயங்கள் கைந்நூலைப் பயன்படுத்தும் போது அதற்குச் சமாந்திரமான வகையில் பாடநூலிலுள்ள விடயங்களையும் தொழிற்பாடுகளையும் உள்வாங்கிக் கொண்டு செயற்படுத்தல் அவசியமாகும். தரஉள்ளீடுகளைப் பொருத்தமானவாறு மாற்றிப் பயன்படுத்தும் சுதந்திரம் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி பாடத்தில் எதிர்பார்க்கப்படும் நோக்கங்களை அடைய பாடஉள்ளடக்கத்தை நன்கு கற்பதற்கான சந்தர்ப்பத்தை மாணவருக்கு ஏற்படுத்திக் கொடுத்தல் ஆசிரியரது பொறுப்பாகும். இதன்போது 2005ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ள 6ஆம் தரத்திற்கான வாழ்க்கைத் தேர்ச்சிகளும் குடியுரிமைக் கல்வியும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியையும் பயன்படுத்தலாம்.

குறைந்தபட்சம் 50 பிரயோகம் சார்ந்த செயற்பாடுகளையாவது பாடக் கற்பித்தலின் போது மேற்கொள்ள வேண்டியது ஆசிரியரது பொறுப்பாகும். மேற்படி ஆசிரியர் கைந்நூல் பற்றிய ஆக்கபூர்வமான ஆலோசனைகளை எமக்கு அனுப்பி வைக்குமாறு தாழ்மையுடன் வேண்டுகிறோம்.

**செயற்றிட்டக் குழு**

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | iii |
| பிரதிப்பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | iv |
| பாடத்திட்டக் குழு | v |
| ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் | vi |
| பாடத்திட்டத்தின் உள்ளடக்கம் | ix |
| கற்றல் கற்பித்தல் செயன்முறைக்கான அறிவுறுத்தல்கள் | |
| 6.1 எமது பாடசாலை | 03 |
| 6.2 நாம் வாழும் பிரதேசம் | 17 |
| 6.3 நற்பிரசையொருவரிடம் காணப்பட்ட வேண்டிய குணவியல்புகள் | 24 |

# குடியியற் கல்வி

# பாடத்திட்டம்

# தரம் 6

**(2015 இலிருந்து அமுல்படுத்துவதற்கானது)**

# அறிமுகம்

1999 ஆம் ஆண்டின் கல்வி மறுசீரமைப்புப் பிரேரணைகளின்படி, 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 7 ஆம் 8 ஆம் 9 ஆம் தரங்களில் "வாழ்க்கைத் தேர்ச்சிகள்" எனும் பாடம் முதன் முதலாக கலைத்திட்டத்தில் அறிமுகஞ் செய்யப்பட்டது.

தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கைப் பிரேரணைகளின்படி 2005 ஆம் ஆண்டு தொடக்கம் "வரலாறும் சமூகக்கல்வியும்" எனும் பாடத்துக்குப் பதிலாக, 6-11 ஆந் தரங்களுக்காக, குடியியற்கல்வி, புவியியல், வரலாறு ஆகிய பாடங்கள் அறிமுகமாயின. அதேவேளை 7-9 ஆந் தரங்களில் "வாழ்க்கைத் தேர்ச்சிகள்" எனும் பாடமும் நடைமுறையில் இருந்தது.

2007 ஆம் ஆண்டு கல்வி மறுசீரமைப்புக்களின் கீழ், வாழ்க்கைத் தேர்ச்சிகள், குடியியற்கல்வி ஆகிய பாடப்பகுதிகள் இணைக்கப்பட்டு 6-9 ஆந் தரங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது. 10-11 ஆந் தரங்களுக்காக, "குடியியற்கல்வியும் ஆட்சியும்" எனப் பாடத்தின் பெயர் மாற்றப்பட்டது.

அதற்கமைய 6-9 ஆந் தரங்களில் பகுதி I என வாழ்க்கைத் தேர்ச்சிகள் பாடமும், பகுதி II என குடியுரிமைக்கல்விப்பாடமும் நடைமுறைப்படுத்தப்பட்டன.

இவ்வாறாக நடைமுறைப்படுத்துகையில் தோன்றிய நடைமுறைப்பிரச்சினைகள், அது வரையில் நடத்தப்பட்ட ஆராய்ச்சிகள் மூலம் கண்டறியப்பட்டவை, ஆசிரியர்களின் கருத்துக்கள், ஆசிரிய ஆலோசகர்களின் கருத்துக்கள் போன்றவற்றை கவனத்திற் கொண்டு இப்பாடத்தை இரண்டு பகுதிகளாகவன்றி, ஒரு தனிப்பாடமாக நடைமுறைப்படுத்துவது விளைதிறனானது என்பது உணரப்பட்டது.

6-9 ஆந் தரங்களில் இப்பாடத்தை இரண்டு பகுதிகளாக நடைமுறைப்படுத்துவதற்குப் பதிலாக, பாடப்பகுதிகளிரண்டினதும் உள்ளடக்கத்தின் ஒத்ததன்மையைக் கவனத்திற் கொண்டு அவற்றை ஒரு பாடமாக ஒன்றிணைந்து நடைமுறைப்படுத்துவது மிகப் பொருத்தமானதாகையால், பாடத்திட்ட நவீனமயப்படுத்தலின்போது ஒரு தனிப்பாடமாக நடைமுறைப்படுத்தத்தக்க வகையில் பாடத்திட்டம் மீள ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய வாழ்க்கைத் தேர்ச்சிகள் பாடப்பகுதியில் அடங்கியிருந்த பாடப்பகுதிகள், தேவை கருதி, பொருத்தமானவாறு குடியியற்கல்விப் பாடப்பகுதியுடன் ஒன்றிணைக்கப்பட்டது.

# அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

1. தொடர்பாடல் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

எழுத்தறிவு: கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையான கருத்துப் பரிமாற்றம்

எண்ணறிவு: பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்

சித்திர அறிவு: கோடு, உருவம் என்பவற்றின் கருமத்தை அறிதல், விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றை கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்

தகவல் தொழினுட்பத் தகைமை: கணினி அறிவு, கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.

2. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்
   - ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டு பிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
   - நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
   - மன எழுச்சிகள், நுண்ணறிவு

3. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறை

உயிரியல் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்பணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

4. வேலை உலகத்திற்கு தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்
   அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போசிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.
   பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்
   அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்
   அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்
   பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்

5. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்
   அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்

6. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்
   அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்

7. "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்
   விரைவாக மாறுகின்ற, சிக்கலான ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

(மூலம் : தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை - 2003)

## குடியியற்கல்வி
## தரம் 6 - 11 பாடக்குறிக்கோள்கள்

1. தமது திறன்கள், ஆற்றல்கள், இயலுமைகளை இனங்கண்டு எதிர்கால வாழ்க்கை இலட்சியங்களை உருவாக்குவதற்கு தேவையான மனோதிடத்தை வளர்த்துக் கொள்ளல்.
2. சிறந்த ஆளுமையுடன் சமூகத்தில் வாழ்வதற்குத் தேவையான தேர்ச்சிகளை வளர்த்தல்.
3. சமூகத்தின் சிறப்பான நிலவுகைக்குப் பங்களிப்புச் செய்யும் சமூக அமைப்புக்கள், நிறுவனங்களுடன் ஒத்துழைப்புடன் செயற்படுவதற்குத் தேவையான மனோதிடத்தை வளர்த்தல்.
4. நிதமும் மாற்றமடைந்து செல்லும் உலகில் எதிர்பாராத சிக்கார்ந்த நிலைமைகளை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்குத் தேவையான ஆற்றல்களை வளர்த்தல்.
5. பன்மைச் சமூகத்தில் ஐக்கியமாக வாழ்வதற்குத் தேவையான மானுடப் பண்புகளையும் சமூக விழுமியங்களையும் கொண்ட பிரசைகளை உருவாக்குதல்.
6. சனநாயகக் கோட்பாடுகளுக்கும் மனித உரிமைகள் தொடர்பான சாசனங்களுக்கும் அமைவாகச் செயற்படும் சமூகமொன்றினை உருவாக்குதல்
7. அனர்த்த முகாமையில் உயிரோட்டமாகப் பங்களிப்புச் செய்து அனர்த்த நிலைமைகளைத் தவிர்த்தலும் ஏற்படத்தக்க இழப்புக்களைக் குறைத்தலும்.
8. அரசியல் எண்ணக்கருக்கள், அவற்றின் நடைமுறைப்பிரயோகங்கள், இலங்கை மற்றும் உலகின் ஆட்சிப்போக்கு தொடர்பான விளக்கத்தை வழங்குதல்.
9. பல்வேறு பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் பல்வேறு பொருளாதார அடிப்படைகளை நுணுகியாய்தலும் அவற்றைச் சமூக வாழ்க்கைக்கு உரித்தாக்கிக் கொள்ளலும்.
10. பரஸ்பரம் பொறுப்புக்களையும் கடப்பாடுகளையும் மதிக்கும் சமூகமொன்றினை உருவாக்குதல்.
11. இலங்கையில் பேண்தகு சமாதானத்தை எட்டுதல்.
12. சமாளிக்கக்கூடிய வாழ்க்கைக் கோலமொன்றினைக் கட்டியெழுப்புவதன் மூலம் இலங்கையின் பேண்தகு அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தல்

# அறிமுகம்

1999 ஆம் ஆண்டின் கல்வி மறுசீரமைப்புப் பிரேரணைகளின்படி, 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 7 ஆம் 8 ஆம் 9 ஆம் தரங்களில் "வாழ்க்கைத் தேர்ச்சிகள்" எனும் பாடம் முதன் முதலாக கலைத்திட்டத்தில் அறிமுகஞ் செய்யப்பட்டது.

தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கைப் பிரேரணைகளின்படி 2005 ஆம் ஆண்டு தொடக்கம் "வரலாறும் சமூகக்கல்வியும்" எனும் பாடத்துக்குப் பதிலாக, 6-11 ஆந் தரங்களுக்காக, குடியியற்கல்வி, புவியியல், வரலாறு ஆகிய பாடங்கள் அறிமுகமாயின. அதேவேளை 7-9 ஆந் தரங்களில் "வாழ்க்கைத் தேர்ச்சிகள்" எனும் பாடமும் நடைமுறையில் இருந்தது.

2007 ஆம் ஆண்டு கல்வி மறுசீரமைப்புக்களின் கீழ், வாழ்க்கைத் தேர்ச்சிகள், குடியியற்கல்வி ஆகிய பாடப்பகுதிகள் இணைக்கப்பட்டு 6-9 ஆந் தரங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது. 10-11 ஆந் தரங்களுக்காக, "குடியியற்கல்வியும் ஆட்சியும்" எனப் பாடத்தின் பெயர் மாற்றப்பட்டது.

அதற்கமைய 6-9 ஆந் தரங்களில் பகுதி I என வாழ்க்கைத் தேர்ச்சிகள் பாடமும், பகுதி II என குடியுரிமைக்கல்விப்பாடமும் நடைமுறைப்படுத்தப்பட்டன.

இவ்வாறாக நடைமுறைப்படுத்துகையில் தோன்றிய நடைமுறைப்பிரச்சினைகள், அது வரையில் நடத்தப்பட்ட ஆராய்ச்சிகள் மூலம் கண்டறியப்பட்டவை, ஆசிரியர்களின் கருத்துக்கள், ஆசிரிய ஆலோசகர்களின் கருத்துக்கள் போன்றவற்றை கவனத்திற் கொண்டு இப்பாடத்தை இரண்டு பகுதிகளாகவன்றி, ஒரு தனிப்பாடமாக நடைமுறைப்படுத்துவது விளைதிறனானது என்பது உணரப்பட்டது.

6-9 ஆந் தரங்களில் இப்பாடத்தை இரண்டு பகுதிகளாக நடைமுறைப்படுத்துவதற்குப் பதிலாக, பாடப்பகுதிகளிரண்டினதும் உள்ளடக்கத்தின் ஒத்ததன்மையைக் கவனத்திற் கொண்டு அவற்றை ஒரு பாடமாக ஒன்றிணைந்து நடைமுறைப்படுத்துவது மிகப் பொருத்தமானதாகையால், பாடத்திட்ட நவீனமயப்படுத்தலின்போது ஒரு தனிப்பாடமாக நடைமுறைப்படுத்தத்தக்க வகையில் பாடத்திட்டம் மீள ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய வாழ்க்கைத் தேர்ச்சிகள் பாடப்பகுதியில் அடங்கியிருந்த பாடப்பகுதிகள், தேவை கருதி, பொருத்தமானவாறு குடியியற்கல்விப் பாடப்பகுதியுடன் ஒன்றிணைக்கப்பட்டது.

# தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலானகல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கரு திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினை தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணகருக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலம் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.
2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.
3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு, என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.
4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்
5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.
6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தி.
7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.
8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

(மூலம் : தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை - 2003)

## அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

1. தொடர்பாடல் தேர்ச்சிகள்

   தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

   எழுத்தறிவு: கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையான கருத்துப் பரிமாற்றம்

   எண்ணறிவு: பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்

   சித்திர அறிவு: கோடு, உருவம் என்பவற்றின் கருமத்தை அறிதல், விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றை கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்

   தகவல் தொழினுட்பத் தகைமை: கணினி அறிவு, கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.

2. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்
   - ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டு பிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
   - நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
   - மன எழுச்சிகள், நுண்ணறிவு

3. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

   இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

   சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறை

   உயிரியல் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்பணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

4. வேலை உலகத்திற்கு தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்
அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போசிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.
பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்
அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்
அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்
பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்

5. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்
அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்

6. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்
அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்

7. "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்
விரைவாக மாறுகின்ற, சிக்கலான ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

(மூலம் : தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை - 2003)

## குடியியற்கல்வி
## தரம் 6 - 11 பாடக்குறிக்கோள்கள்

1. தமது திறன்கள், ஆற்றல்கள், இயலுமைகளை இனங்கண்டு எதிர்கால வாழ்க்கை இலட்சியங்களை உருவாக்குவதற்கு தேவையான மனோதிடத்தை வளர்த்துக் கொள்ளல்.
2. சிறந்த ஆளுமையுடன் சமூகத்தில் வாழ்வதற்குத் தேவையான தேர்ச்சிகளை வளர்த்தல்.
3. சமூகத்தின் சிறப்பான நிலவுகைக்குப் பங்களிப்புச் செய்யும் சமூக அமைப்புக்கள், நிறுவனங்களுடன் ஒத்துழைப்புடன் செயற்படுவதற்குத் தேவையான மனோதிடத்தை வளர்த்தல்.
4. நிதமும் மாற்றமடைந்து செல்லும் உலகில் எதிர்பாராத சிக்கார்ந்த நிலைமைகளை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்குத் தேவையான ஆற்றல்களை வளர்த்தல்.
5. பன்மைச் சமூகத்தில் ஐக்கியமாக வாழ்வதற்குத் தேவையான மானுடப் பண்புகளையும் சமூக விழுமியங்களையும் கொண்ட பிரசைகளை உருவாக்குதல்.
6. சனநாயகக் கோட்பாடுகளுக்கும் மனித உரிமைகள் தொடர்பான சாசனங்களுக்கும் அமைவாகச் செயற்படும் சமூகமொன்றினை உருவாக்குதல்
7. அனர்த்த முகாமையில் உயிரோட்டமாகப் பங்களிப்புச் செய்து அனர்த்த நிலைமைகளைத் தவிர்த்தலும் ஏற்படத்தக்க இழப்புக்களைக் குறைத்தலும்.
8. அரசியல் எண்ணக்கருக்கள், அவற்றின் நடைமுறைப்பிரயோகங்கள், இலங்கை மற்றும் உலகின் ஆட்சிப்போக்கு தொடர்பான விளக்கத்தை வழங்குதல்.
9. பல்வேறு பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் பல்வேறு பொருளாதார அடிப்படைகளை நுணுகியாய்தலும் அவற்றைச் சமூக வாழ்க்கைக்கு உரித்தாக்கிக் கொள்ளலும்.
10. பரஸ்பரம் பொறுப்புக்களையும் கடப்பாடுகளையும் மதிக்கும் சமூகமொன்றினை உருவாக்குதல்.
11. இலங்கையில் பேண்தகு சமாதானத்தை எட்டுதல்.
12. சமாளிக்கக்கூடிய வாழ்க்கைக் கோலமொன்றினைக் கட்டியெழுப்புவதன் மூலம் இலங்கையின் பேண்தகு அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தல்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **எமது பாடசாலை**<br>6.1 உயிரோட்டமான ஓர் உறுப்பினர் என்ற வகையில் பாடசாலைச் சமூகத்தின் அபிவிருத்தியில் பங்களிப்புச் செய்வார். | 6.1.1 பாடசாலையின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் நுணுகி ஆய்வார். | • தோற்றம் பெற்ற பின்னணி<br>- ஆரம்பிக்கப்படுவதற்கு ஏதுவான காரணங்கள்<br>- தோற்றம் பெற்ற விதம்<br>- தோற்றம் பெறுவதில் தலையிட்டுச் செயற்பட்ட தனியாட்கள்<br>- முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்ட இடம்<br>- பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதியில் கிராமத்தின்/ நகரத்தின் பின்னணி<br>• சமூகப் பொருளாதார நடவடிக்கைகள்<br>• சீவனோபாய வழிகள்<br>- பாடசாலையிலிருந்து உருவாகிய புகழ் பெற்ற பழைய மாணவர்கள் | • பாடசாலையின் தோற்றம் தொடர்பான அடிப்படைத் தகவல்களை விளக்குவார்.<br>• பாடசாலையின் ஆரம்பிப்பதற்கு முன்னின்று உழைத்தோரின் சேவையை மதித்துக் கருத்துத் தெரிவிப்பார்.<br>• பாடசாலை தோற்றம் பெற்ற காலத்தில் கிராமத்தின் நகரத்தின் சமூக, பொருளாதாரப் பின்னணி பற்றிய தகவல்களை முன்வைப்பார்.<br>• படசாலையினால் ஆற்றப்படும் சேவையை மதித்துக் கருத்துத் தெரிவிப்பார்.<br>• பாடசாலையின் ஒழங்கமைப்புக் கட்டணம் பருமட்டான திட்டப்படமொன்றின் மூலம் காட்டுவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 6.1.2 பாடசாலையின் ஒழுங்கமைப்பை நுணுகி ஆய்வார். | • பாடசாலையின் ஒழுங்கமைப்பு/ கட்டமைப்பு<br>• பாடசாலை ஒழுங்கமைப்பில் வெவ்வேறு வகிபாகங்கள் மற்றும் பதவிகளை வகிப்போரின் கடமைகளும் பொறுப்புக்களும்<br>• பல்வேறு பதவிகளை வகிப்போர் தமது கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றுவதன் மூலம் பாடசாலையின் வெற்றிக்குப் பங்களிப்பு செய்யும் விதம்<br>• ஒவ்வொரு உறுப்பினரும் பாடசாலை ஒழுங்கமைப்பில் பங்காளியாகின்றமை | • பாடசாலையின் வெவ்வேறு பணிகளை ஆற்றுவோர், தத்தமது கடமைகளையும் பொறுப்புக்களையும் செவ்வனே ஆற்றுதலானது பாடசாலையின் விளைதிறன் மீது செல்வாக்குச் செலுத்தும் விதத்தை விளக்குவார்.<br>• பாடசாலையினது செயலடைவின் பால் ஒவ்வோர் உறுப்பினரதும் உயிரோட்டமான பங்களிப்பு கிடைப்பதன் அவசியத்தை ஏற்றுக் கருத்துத் தெரிவிப்பார்.<br>• படசாலையினுள் ஆற்றப்படும் சேவையை மதித்துக் கருத்துத் தெரிவிப்பார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 6.1.3 பாடசாலைச் சமூகத்தின் உறுப்பினர் என்ற வகையில் தம்மைப் பற்றிய தகவல்களின் அவசியத்தை ஆராய்வார். | • தமது தனித்துவம்<br>- தமது பெயரும் வயதும்<br>- முகவரி<br>- பாடசாலையில் சேர்ந்த திகதியும் சேர்விலக்கமும்<br>• தமது நற்பண்புகள்<br>• தமது திறமைகள்<br>- அத்திறன்களை விருத்தி செய்து கொள்வதற்காக எடுக்கத்தக்க நடவடிக்கைகள்<br>• தமது குறைபாடுகளை இனங்காணல்<br>- அவற்றை இயன்ற அளவுக்குக் குறைத்துக் கொள்வதற்காக அனுசரிக்க வேண்டிய வழி வகைகள்<br>• தாம் எதிர்நோக்கும் தடைகள்<br>- அத்தடைகளை வெற்றி கொள்வதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்<br>• தமது அபிவிருத்திக்காக பாடசாலையில் கிடைக்கும் வாய்ப்புக்கள் | • பாடசாலையில் தமது தனித்துவத்தை வளர்த்துக் கொள்ளத் துணையாகும் தகவல்களை வழங்குவார்.<br>• தம்மிடமுள்ள நற்பண்புகளை இனங்கண்டு அவற்றை வளர்த்துக்கொள்ள ஆவன செய்வார்.<br>• தமது குறைகளை இனங்கண்டு அவற்றைக் குறைத்துக் கொள்ள ஆவன செய்வார்.<br>• தாம் எதிர்கொள்ளும் தடைகளை இனங்கண்டு அவற்றைக் வெற்றி கொள்வதற்காக முயற்சியுடன் செயற்படுவார்.<br>• தமது விருத்திக்காகப் பாடசாலையினால் வழங்கப்படும் சந்தர்ப்பங்களை உச்ச அளவில் பயன்படுத்திக் கொள்வார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 6.1.4 பாடசாலைச் சமூகத்தின் ஓர் உறுப்பினர் என்ற வகையில் தமது கருமங்களைத் திட்டமிட்டு ஒழுங்கமைத்து நிறைவேற்றுவார். | • நாளாந்தக் கருமங்களைத் திட்டமிட்டு நிறைவேற்றுதல்<br>- அதிகாலையில் நித்திரையிலிருந்து எழுந்தவேளை தொடக்கம் இரவு நித்திரைக்குச் செல்லும் வேளை வரையில் செய்யும் கருமங்கள்<br>- குறித்த நேரத்துக்கு முன்னரே பாடசாலைக்குச் செல்லுதல்<br>- நேரசூசிப்படி, புத்தகங்கள், ஏனைய பொருட்களை எடுத்துச் செல்லுதல்<br>- பாடசாலை நேரசூசிப்படி செயற்படுதல்<br>- நேரத்தை வினைத்திறனுள்ளவாறு பயன்படுத்தல் | • தமது நாளாந்த கருமங்களைத் திட்டமிட்டு நிறைவேற்றுவார்.<br>• தமது கருமங்களை நன்கு திட்டமிட்டு, ஒழுங்கமைத்து நிறைவேற்றுவதன் முக்கியத்துவத்தை மதித்துக் கருத்துத் தெரிவிப்பார்.<br>• வெவ்வேறு சந்தர்ப்பங்களில் திட்டமிட்டு ஒழுங்கமைத்துச் செயற்படும் திறனை வெளிக்காட்டுவார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | - வகுப்பறை மற்றும் பாடசாலைச் சுத்திகரிப்புக் கருமங்களைத் திட்டமிடுவதற்கும் நடைமுறைப் படுத்துவதற்கும் துணைபுரிதல்<br>- சுற்றாடலை அழகுபடுத்தும் கருமங்களை மேற்கொள்ளல்<br>- பாடசாலையிலும், வகுப்பறையிலும் விசேட சந்தர்ப்பங்களில் திட்டமிட்டுச் செயற்படுதல் | | |
| | 6.1.5 பாடசாலைப் பண்பாட்டில் நடை முறையில் உள்ள சட்டதிட்டங்கள் மரபுகளுக்கு இணங்கி நடப்பார். | • பாடசாலையில் நடைமுறையிலுள்ள சட்டதிட்டங்கள்<br>- பாடசாலைக்குச் சட்டதிட்டமுறைமையொன்று தேவைப்படுவதற்கான காரணங்கள், சட்ட திட்டங்கள் பற்றி அறிவூட்டம் பெறுதல், சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்படுதல். | • பாடசாலையின் சீரான இருப்புக்காக சட்டதிட்ட முறையொன்றின் அவசியத்தை விளக்குவார்.<br>• பாடசாலையில் காணப்படும் மரபுகளை இனங்கண்டு அவற்றுக்கு இசைவடைவார். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | • பாடசாலையில் நடைமுறையில் உள்ள சட்டங்கள்<br>- உரிய நேரத்துக்கு பாடசாலைக்கு வருகை தருதல்<br>- சீருடையணிந்து பாடசாலைக்கு வருதல்<br>- பாடசாலை நேரத்துள் பாடசாலையில் தங்கியிருத்தல்<br>- பாடசாலை நேரசூசிப்படி கற்கைக் கருமங்களில் ஈடுபடுதல்<br>- அதிபர், ஆசிரியர்களுக்கு மதிப்பளித்தல்<br>- மாணவ தலைவர்கள்/ தலைவிகள் வகுப்புத் தலைவர்கள்/ தலைவிகளுக்கு மதிப்பளித்தல், சகோதர மாணவர்களுக்கு மதிப்பளித்தல்<br>- பாடசாலையில் நடைமுறையிலுள்ள மரபுகளை மதித்தல் | • சட்டதிட்டங்களை மதிப்பதன் மூலம் ஏனையோரின் உரிமைகள் பாதுகாக்கப்படும் என்பதை ஏற்று அதற்கமையச் செயற்படுவார்.<br>• தமது கடமைகள் பொறுப்புக்களை நிறைவேற்றுவதன் ஊடாக பாடசாலையின் நற்பெயரையும் கௌரவத்தையும் காப்பதற்காகப் பங்களிப்புச் செய்வார்.<br>• பாடசாலையின் தனித்துவத்தைப் பிரதிபலிக்கும் குறியீடுகளை மதிப்பார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | • மரபுகள்<br>- மரபுகளை இனங்காணலும் மதித்தலும்<br>- மரபுகளுக்கு இசைவடைதல்<br>- மரபுகளை பேணிக்காப்பதன் முக்கியத்துவம்<br>• பாடசாலையின் தனித்துவத்தை வெளிப்படுத்தும் குறியீடுகள்<br>- **பாடசாலைக் கீதம்**<br>- பாடசாலைக் கீதத்தின் அவசியம்<br>- பாடசாலையைத் தாய் போன்று கருதி பெரும்பாலான பாடசாலைக் கீதங்கள் இயற்றப் பட்டிருத்தல்<br>- பாடசாலைக் கீதத்தின் பொருள்<br>- பாடசாலைக் கீதத்தைப்பாடும் சந்தர்ப்பங்கள்<br>- பாடசாலைக் கீதத்தைப்பாடும் சந்தர்ப்பத்தில் உரியவாறு மதிப்பளித்தல் | | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | - **பாடசாலைக் கொடி**<br>• நிறங்கள்/ குறியீடுகளால் குறிக்கப்படுபவை<br>• கொடியை ஏற்றும் சந்தர்ப்பங்கள்/ கொடியை ஏற்றும் முறை<br>• மதிப்பளிக்க வேண்டிய விதம்<br>• மதிப்பளிப்பதன் முக்கியத்துவம்<br>- **பாடசாலைச் சீருடை**<br>- சீருடையின் தரம்<br>- எளிமையானது<br>- சீரானது<br>- சமமானது<br>- **பாடசாலை இலச்சினை**<br>- நிறங்கள்/ குறியீடுகளால் குறிக்கப்படுபவை<br>- பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள்<br>- **மகுட வாசகம்**<br>- அது கூறும் கருத்து<br>- அது வாழ்க்கைக்கு முன்மாதிரியாக அமைதல் | | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | - **பாடசாலை நோக்குக்கூற்றும் பணிக்கூற்றும்**<br>- பாடசாலையினால் சமூகத்துக்கு ஆற்றப்படும் பணிகள்<br>- பாடசாலை தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள சான்றோர் கருத்துக்கள் | | |
| | 6.1.6 பாடசாலைச் சமூகத்தின் ஓர் உறுப்பினர் என்றவகையில் தமது உரிமைகளை அனுபவித்தவாறு அவற்றுடன் இணைந்த கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றுவார். | • பாடசாலை மாணவன்/ மாணவி என்ற வகையில் தமக்குரிய உரிமைகள்<br>• அவ்வுரிமைகளை உறுதிப்படுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்<br>• அவ்வுரிமைகளுடன் இணைந்த கடமைப்பாடுகள்<br>- பாடசாலையின் நற்பெயருக்கும் கௌரவத்துக்கும் களங்கம் ஏற்படாதவாறு நடந்துகொள்ளல்<br>- ஒழுக்கம் பேணி, சட்டத்தை மதித்து நடத்தல் | • பாடசாலையில் ஒவ்வொரு மாணவனுக்கும் மாணவிக்கும் சமமான உரிமைகள் உரித்தாகும் என்பதை ஏற்றுக் கருத்துத் தெரிவிப்பார்.<br>• பாடசாலை மாணவர் என்ற வகையில் தமது உரிமைகளை அனுபவித்தவாறு அதனுடன் இணைந்த பொறுப்புக்களை நிறைவேற்றுவதன் முக்கியத்துவத்தை விளக்குவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | - தனித்துவத்தைப் பாதுகாத்தல்<br>- சமத்துவத்துடனும் சகவாழ்வுடனும் செயற்படுதல்<br>- பாடசாலையின் பௌதிகச் சூழலைப் பாதுகாப்பதற்காகச் செயற்படுதல் | • பாடசாலைச் சமூகத்தின் ஓர் உறுப்பினர் என்ற வகையில் சக வாழ்வுடனும் சமத்துவமாக செயற்படுவார்.<br>• பாடசாலையின் பௌதிகச் சூழலைப் பாதுகாப்பதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவார். | |
| | 6.1.7 ஆசிரியர் – மாணவர் கடமைகள் தொடர்பான விளக்கத்துடன் செயற்படுவார் | • ஆசிரியர்களும் மாணவரும் தமக்கிடையே பரஸ்பரம் கடமைகளை நிறைவேற்றுதல்<br>• மாணவர் - மாணவர் தமக்கிடையே கடமைகள் - பொறுப்புக்களை நிறைவேற்றல் | • மாணவர்கள் தமது ஆசிரியர்களுக்காக நிறைவேற்ற வேண்டிய கடமைகளை இனங்கண்டு அவற்றுக்கு அமைவாகச் செயற்படுவார்.<br>• ஆசிரியர்கள் தமது மாணவர்களுக்காகச் நிறைவேற்ற வேண்டிய கடமைகளை நிறைவேற்றுவதன் முக்கியத்துவத்தை விளக்குவார்.<br>• மாணவர்கள் பரஸ்பரம் தம்மிடையே கடமைகளை நிறைவேற்றுவதன் பெறுமானத்தை விவரிப்பார். | 01 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 6.1.8 பாடசாலைக்கும் சமூகத்துக்கும் இடையிலான தொடர்புகளை ஆராய்வார். | • பாடசாலைக்கும் சமூகத்துக்கும் இடையில் பரஸ்பர தொடர்பு காணப்படுதல்<br>• பாடசாலை மூலம் சமூகத்துக்கும் சமூகத்தின் மூலம் பாடசாலைக்கும் ஆற்றப்படும் சேவைகள்<br>• பாடசாலைக்கும் சமூகத்துக்கும் இடையில் காணப்படும் பல்வேறு தொடர்புகள்<br>உதா: பெற்றோர்/ பழைய மாணவர்கள்/ நலன்விரும்பிகள்/ அரச நிறுவனங்கள்/ அரசு சாரா நிறுவனங்கள்/ மக்கட் பிரதிநிதிகள்<br>• அத்தொடர்புகளைப் பாடசாலையினதும் சமூகத்தினதும் மேம்பாட்டுக்காகப் பயன்படுத்தும் விதம்<br>• பாடசாலையின் இருப்புக்கு சமூகம் தேவையாக இருத்தலும் சமூகத்தின் இருப்புக்கு பாடசாலை தேவையாக இருத்தலும் | • பாடசாலைக்கும் சமூகத்துக்கும் இடையில் காணப்படும் பரஸ்பர தொடர்புகளின் தன்மையை விபரிப்பார்.<br>• பாடசாலைக்கும் சமூகத்துக்கும் இடையிலான தொடர்பானது சமூக அபிவிருத்திக்குத் துணையாகும் விதத்தை விவரிப்பார்.<br>• பாடசாலையைப் பாதுகாத்தலானது சமூகத்தின் கடமையும் பொறுப்புமாகும் என்பதை விளக்குவார்.<br>• பிள்ளைநேயப் பாடசாலைச் சமூகமொன்றினைக் கட்டியெழுப்புவதற்காக ஆசிரியர் களதும் மாணவர்களதும் பணிகளை விளக்குவார். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | • பாடசாலையைப் பாதுகாத்தல் ஒரு சமூகப் பொறுப்பாகும்<br>• சிறுவர் - நேயப் பாடசாலைச் சமூகத்தை உருவாக்குவதற்கான ஆசிரியர் - மாணவர் பொறுப்புக்களும் சமுதாயப் பொறுப்புக்களும் | | |
| **நாம் வாழும் பிரதேசம்**<br><br>6.2 பிரதேசத்திலுள்ள மனித மற்றும் பௌதிக வளங்களை சமூகத்தின் சிறந்த நிலவுகைக்குத் துணையாகக் கொள்வார். | 6.2.1 தாம் வாழும் பிரதேசத்தின் வளங்களை மதித்து அவற்றைப் பாதுகாக்க ஆவன செய்வார். | • தமது பிரதேசத்தின் அமைவு<br>- மாகாணம்<br>- மாவட்டம்<br>- பிரதேச செயலாளர் பிரிவு<br>- கிராம அதிகாரி பிரிவு<br>• பௌதிக வளங்களை இனங்காணல்<br>உதா: வளி, நீர், மண், கனியங்கள், மலைகள், நீர்வீழ்ச்சிகள், ஆறுகள், காடுகள், இயற்கைத் தாவரங்கள், வன விலங்குகள் | • தமது பிரதேசத்தின் அமைவை, நிருவாக அலகுகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குவார்.<br>• தமது பிரதேசத்தின் பௌதிக, மனித வளங்களை இனங்கண்டு பெயரிடுவார்.<br>• பிரதேசத்தின் பௌதிக வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல் மற்றும் பாதுகாத்தலின் முக்கியத்துவத்தை விளக்குவார். | 07 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | • நவநாகரிக நபரும் சமூகமும், பொருளாதாரத் தேவைகளுக்கேற்ப இலங்கையை விளைதிறன் உடையவாறு பயன்படுத்தல்<br>• பிரதேசத்திலுள்ள பௌதிக வளங்கள் வரையறைக் குட்பட்டவையாகையால், அவற்றைச் சிக்கனமாகப் பயன்படுத்துதலும் பாதுகாத்தலும்<br>• மனித வளங்கள்: அடையாளங்காணல்<br>- மனிதனின் அறிவாற்றல்கள் மற்றும் உடல் சார்ந்த ஆற்றல்கள் மூலம் மனித வளங்கள் உருவாகி யுள்ளமை<br>உதா: அறிவாற்றல்கள் சார்ந்த மனித வளங்கள் (புலமைசார் ஆற்றல்கள்)<br>• மனித வளங்களின் தரத்தை மேம்படுத்தல் | • மனிதவள விருத்திக்காக மேற்கொள்ளத்தக்க நடவடிக்கைகளைப் பிரேரிப்பார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 6.2.2 பிரதேச மக்களுடன் ஐக்கியமாக வாழ்வதற்குரிய ஆயத்தத்தை வெளிக்காட்டுவார். | • பிரதேச மக்களிடத்தே ஐக்கியம் தெள்ளத்தெளிவாக வெளிக்காட்டப்படும் சந்தர்ப்பங்கள்<br>- தமது குடும்பத்தினதும் தமது பிரதேசத்தினதும் மேம்பாட்டுக்காக அதன் உறுப்பினர்களின் ஒற்றுமையும் செயல்ரீதியான ஒத்துழைப்பும் இன்றியமையாததாகும். உதாரணம்:<br>- குளம் கட்டுதல்<br>- கோயில்/ தேவாலயம்/ பள்ளிவாசல்/ தாது கோபம் அமைத்தல்<br>- திருமண வைபவங்கள்/ மரணச் சடங்குகள்/ சமய நிகழ்ச்சிகள்/ விவசாயநடவடிக்கைகள்/ அன்னதான நிகழ்ச்சிகள்/ ஊர்வலங்கள்/ சிரமதானங்கள் | • பிரதேச மக்களிடையே ஐக்கியம் தெள்ளத்தெளிவாகத் தென்படும் சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுவார்.<br>• ஐக்கியமாகச் செயற்படுவதன் முக்கியத்துவத்தை மதித்துக் கருத்துத் தெரிவிப்பார். | 06 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
| --- | --- | --- | --- | --- |
| | | • ஐக்கியத்துடன் செயற்படுவதால் கிடைக்கும் பயன்கள்:<br>- வேலைகளை இலகுவாகவும் துரிதமாகவும் செய்தல்<br>- ஆட்களிடையே நட்புணர்வை ஏற்படுத்த முடிதல்<br>- ஒற்றுமையும் சகோதரத்துவமும் மேம்படுதல்<br>- சம்பிதாயபூர்வமான பழக்கவழக்கங்களை பேணுதல்<br>- பணத்தினால் மாத்திரம் செய்ய முடியாதவற்றை, கூட்டுமுயற்சியின் மூலம் செய்யக்கூடியதாக இருத்தல்<br>- ஐக்கியமாகச் செயற்படுவதன் மூலம் மகிழ்ச்சியும் களிப்பும் கிடைத்தல் | | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 6.2.3 தமது நாளாந்த வாழ்க்கைக்கு, பல்வேறு நபர்கள் மற்றும் நிறுவனங்களின் பங்களிப்பு அவசிய மென்பதை புரிந்துகொண்டு செயலாற்றுவார். | • ஒருவர், சமூகத்தில் வாழும்போது தமது தேவைகளை தனியே நிறைவு செய்து கொள்வது இலகுவானதல்ல.<br>• அத்தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்கு பல்வேறு தனியாள்களதும் நிறுவனங்களதும் உதவி தேவை.<br>• பல்வேறு கருமங்களை ஆற்றுவதற்காக, தனியாட் களும் அமைப்புக்களும் சமூகத்தில் உருவாகி யுள்ளன.<br>• எமக்கு உதவிபுரிவோரும் அவர்கள் வழங்கும் சேவைகளும்<br>உதா: - கிராம அதிகாரி<br>- சமுர்த்திஅதிகாரி<br>- குடும்பசுகாதாரத் தாதி<br>- பொதுச் சுகாதாரப் பரிசோதகர்<br>- அஞ்சற்காரர்<br>- பொலிஸ் அதிகாரி<br>போன்றோர் | • சமூகத்தின் தேவைகளை வெவ்வேறு ஆட்கள் மற்றும் நிறுவனங்களைக் குறிப்பிடுவார்.<br>• எமக்கு உதவும் நிறுவனங்கள் மற்றும் தனியாள்களால் ஆற்றப்படும் சேவைகளை வெவ்வேறாகப் பட்டியற்படுத்துவார்.<br>• பிரதேச மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான தனித்துவமான சங்கங்கள் - கழகங்களினால் ஆற்றப்படும் தேவைகளை மதித்துக் கருத்துத் தெரிவிப்பார்.<br>• சேவை வழங்குவோரதும் சேவை பெறுவோரதும் கடமைகள், பொறுப்புக்களை விவரிப்பார். | 07 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | • எமக்கு உதவும் நிறுவனங்களும் அவற்றினால் ஆற்றப்படும் சேவைகளும் உதா: பிரதேச செயலாளர் அலுவலகம், உள்ளூராட்சி நிறுவனங்கள் (மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை), வைத்தியசாலை<br>• பிரதேச வழிபாட்டுத்தலங்கள், சங்கங்கள், கழகங்கள், நிறுவனங்களால் ஆற்றப்படும் சேவைகள்<br>வழிபாட்டுத் தலம்<br>இந்து - கோயில்<br>கிறித்தவம் கத்தோலிக்கம் தேவாலயம்<br>இஸ்லாம் - பள்ளிவாசல்<br>பௌத்தம் - பன்சாலை | | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | - இதன்போது தமது பிரதேசத்தில் காணப்படும் கோயில்கள், தேவாலயங்கள், பள்ளிவாசல்கள், பன்சாலைகள் ஆகியவற்றை இனங்காணல்<br>• சமய வழிபாட்டுத் தலங்களால் ஆற்றப்படும் சேவைகள்<br>- மனிதனின் ஆன்மீகப் பண்புகளை மேம்படுத்தல்<br>- ஒழுக்கம் பேணல், விழுமியவிருத்தி<br>- கருணை, இரக்கம், அன்பு, பொறுமை போன்ற பண்புகளை விருத்தி செய்தல்<br>- சமய அறிவை வழங்குதல்<br>- சமூகத்தில் சமயம் சார்ந்த தேவைகளை நிறைவேற்றுதல் | | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | உதா: அன்னதான நிகழ்வுகளில்<br>மரணச்சடங்குகளில்<br>திருமண வைபவங்களில்<br>- ஆலோசனை, வழிகாட்டல் வழங்குதல்<br>உதா: முரண்பாடுகளின் போது, குடும்பப் பிரச்சினைகளின் போது, சங்கங்கள், கழகங்களை நடத்திச் செல்லும் போது<br>• சமய நிறுவனங்களுக்கும் சமூகத்துக்கும் இடையே நல்ல தொடர்புகளை ஏற்படுத்தி, சமூகத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்<br>• பிரதேச சங்கங்கள், கழகங்கள் | | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | - பிரதேசத்திலுள்ள மக்கள் தமது சமூக, பொருளாதார, பண்பாட்டு மற்றும் சூழல் போன்ற பல்வேறு பொதுத் தேவைகளை நிறைவுசெய்து கொள்வதற்காக சங்கங்கள், கழகங்களைத் தாபித்துள்ளமை<br>உதா: கூட்டுறவுச்சங்கம், கமத்தொழிற்சங்கம், மீனவர் சங்கம், கிராம அபிவிருத்திச் சங்கம், விளையாட்டுக்கழகம், மரண உதவிச் சங்கம், சமய சங்கம்<br>• பிரதேசத்தில் இயங்கும் சங்கங்கள், கழகங்களால் ஆற்றப்படும் சேவைகள்<br>• சேவைகளை வழங்குவோரதும் சேவைகளைப் பெறுவோரதும் பொறுப்புக்கள் | | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **நற்பிரசை என்ற வகையில் விருத்தி செய்ய வேண்டிய பண்புகள்**<br>6.3 நற்பண்புகளைக் கொண்ட ஓர் உறுப்பினர் என்ற வகையில் சமூகத்தில் செயற்படுவதற்கு ஆயத்த மாவார். | 6.3.1 மொழியை மரியாதையாகப் பயன் படுத்துவார். | • அடக்கமாகவும் முகமலர்ச்சியுடனும் சரியாகவும் ஏனையோரை மதிக்கும் வகையிலும் மொழியைப் பயன்படுத்துதல்.<br>• மொழியை மரியாதையாகப் பயன்படுத்தல்<br>உதா:<br>வணக்கத்துக்குரியோருடன்/ கௌரவத்துக்குரி யோருடன்<br>ஆசிரியருடன்<br>மூத்தோருடன்<br>சமவயதுக் குழுவினருடன்<br>• இடத்துக்கும் சந்தர்ப்பத்துக்கும் பொருத்தமானவாறு மொழியைக் கையாள்தல் | • மரியாதையாக, மொழியைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை விளக்குவார்.<br>• மொழியை மரியாதையாகக் கையாளும் போது கவனஞ் செலுத்த வேண்டிய பண்புகளை வெளிக்காட்டுவார்.<br>• சமயோசிதமாக மொழியைப் பயன்படுத்துவார். | 01 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 6.3.2 ஏனையோரின் கருத்துக்களை மதித்து கலந்துரையாடல் மூலம் இணக்கப்பாட்டுக்கு வருவார். | • விருத்தி செய்துகொள்ளவேண்டிய தொடர்பாடல் திறன்கள்<br>- முறையாகச் செவிமடுத்தல்<br>- சமூகத்தில் செயற்படும் போது ஏனையோரின் கருத்துக்களைச் சகித்தல்<br>- சரியான கருத்துக்களை மதித்தல்<br>- ஏனையோருக்கு கருத்துத் தெரிவிக்கச் சந்தர்ப்பம் அளித்தல்<br>- பொருத்தமற்ற கருத்துக்களை முரண்பாடின்றி மிதப்படுத்துதல்<br>- ஏனையோரின் கருத்துக்களைச் சகிப்பதன் முக்கியத்துவம் | • தொடர்பாடற் கருமத்தின் போது உயிரோட்டமாகச் செவிமடுப்பார்<br>• ஏனையோரின் கருத்துக்களைப் பொறுப்பதன் அனுகூலங்களை விவரிப்பார்.<br>• நாளாந்தக் கருமங்களின் போது கலந்துரையாடல் மூலம் இணக்கப்பாட்டுக்கு வருவார்.<br>• விளைதிறனான தொடர்பாடல் மூலம் நல்ல ஆளிடைத் தோடர்புகளைக் உருவாக்கிக் கொள்வார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 6.3.3 நல்ல ஒழுக்கத்துடனும் கட்டுப்பாட்டுடனும் செயற்படுவார். | • ஒழுக்கமும் கட்டுப்பாடும்- அறிமுகம்<br>• கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்காக, கற்றல், கற்பித்தல், பயிற்சி ஆகிய மூன்று அம்சங்களும் மேம்படுத்தப்படல் வேண்டும்.<br>• ஒருவர் தமது வாழ்க்கைக் காலத்தில் நல்லொழுக்கத் தையும் கட்டுப்பாட்டையும் பேணி வருதல் வேண்டும்.<br>• நல்லொழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் பேணிவருவதன் முக்கியத்துவம் | • ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் ஏற்படுத்தும் பொதுப் பண்புகளை விபரிப்பார்.<br>• ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் ஒருவர் தமது வாழ்க்கைக் காலம் முழுவதிலும் பேணிவருவதன் முக்கியத்துவத்தை விளக்குவார்.<br>• நாளாந்த வாழ்க்கையில் நல்ல ஒழுக்கத்துடனும் கட்டுப்பாடனும் செயற்படுவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 6.3.4 சமூகத்தில் காணப்படும் நன்மை யானவற்றை நன்மையானவை யாக என இனங்கண்டு ஏற்றுக் கொள்வதோடு தீமையானவற்றை தீமையானவையென இனங்கண்டு மறுதலிப்பார். | • சமூகத்தில் செயற்படும் நன்மையானவற்றை இனங்காணல்<br>• சமூகத்தின் சிறப்பான நிலவுகைக்கு ஏற்றவற்றை நன்மையானவை என ஏற்றுக்கொள்ளல்<br>• சமூகத்தில் செயற்படும் தீமையானவற்றை இனங்கண்டு அவற்றை மறுதலித்தல்<br>• சமூகத்தின் சீர்கேட்டுக்குக் காரணமாக அமையத் தக்கவற்றை தீமையானவை என இனங்கண்டு, மறுதலித்தல் | • சமூகத்தில் உள்ள செழுமையானவற்றையும் செழுமையற்றவற்றையும் வேறுபடுத்தி இனங்காண்பார்.<br>• சமூகத்தில் செழுமையானவற்றுக்கு இசைவாகச் செயற்படுவதற்காகப் பொருத்த மான முறைகளைப் பிரேரிப்பார்.<br>• சமூகத்தில் செழுமையற்றவற்றை மறுதலிக்கும் விதத்தை விளக்குவார். | 02 |
| | 6.3.5 சமூக மரபுகளையும் சட்ட திட்டங்களையும் மதிப்பார். | • மரபுகள் - அறிமுகம்<br>• சட்டதிட்டங்கள் - அறிமுகம்<br>• ஒவ்வொரு சட்டத்துடனும் இணைந்த ஒவ்வொரு தண்டனை உண்டு<br>• சட்டதிட்டங்கள், மரபுகளை மதிப்பதன் முக்கியத்துவம் | • சட்டதிட்டங்களையும் பாரம்பரியங்களையும் மதிப்பதன் முக்கியத:துவத்தை வீளக்குவார்.<br>• சமூகப் பாரம்பரியங்களையும் சட்டதிட்டங்களையும் பின்பற்றப்பழகிக் கொள்வர். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
| --- | --- | --- | --- | --- |
| | 6.3.6 வளங்களைச் சிக்கனமாகக் கையாள்வார். | • வளங்கள் - அறிமுகம்<br>• வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதன் முக்கியத்துவம்<br>• பாடசாலை மாணவன்/ மாணவி என்ற வகையில் வள வீண் விரயத்தைத் தவிர்க்கத்தக்க சந்தர்ப்பங்கள்<br>• வள வீண்விரயத்தைத் தவிர்த்தலின் முக்கியத்துவம் | • வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல் வேண்டும் என விளக்குவார்.<br>• பாடசாலை மாணவர் என்ற வகையில் வள வீண்விரயத்தைத் தவிர்க்கும் உத்திகளைக் கையாள்வார்<br>• வள வீண்விரயத்தைத் தவிர்ப்பதால் கிடைக்கும் அனுகூலங்களை வரிசைப் படுத்துவார்.<br>• சுற்றுப்புறச் சூழலில் வளவீண்விரயத்தை குறைப்பதற்காகப் பங்களிப்புச் செய்யத்தக்க சந்தர்ப்பங்களை விளக்குவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 6.3.7 பொதுச் சொத்துக்களைப் பொறுப்பு டன் பாதுகாப்பார். | • பொதுச்சொத்துக்கள் - அறிமுகம்<br>• பொதுச்சொத்துக்களின் இயல்புகள்<br>• பொதுச்சொத்துக்களைப் பாதுகாத்தலும் அதன் முக்கியத்துவமும்<br>• பொதுச்சொத்துக்களைப் பாதுகாப்பதற்கான வழிவகைகள் | • பொதுச் சொத்துக்களை ஆக்குவதற்கும் அவற்றைப் பராமரிப்பதற்கும் அரசு பாரிய அளவில் செலவு செய்கின்றமையை ஏற்று விடயங்களை விளக்குவார்.<br>• பொதுச் சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக எடுக்கத்தக்க நடவடிக்கைகளை விளக்குவார்.<br>• பொதுச் சொத்துக்களைப் பாதுகர்ப்பதன் முக்கியத்துவம் குறித்து பொதுமக்களுக்கு அறிவூட்டம் செய்வார்.<br>• பொதுச் சொத்துக்களை தமது தேவைகளின் போது பயன்படுத்துவதோடு அவற்றைப் பாதுகாப்பார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 6.3.8 சுற்றாடற் பாதுகாப்பினூடாக பேண்தகு அபிவிருத்திக்காக உயிரோட்டமாகப் பங்களிப்புச் செய்வார். | • சுற்றாடல் - அறிமுகம்<br>• எமது இருப்புக்கு சுற்றாடல் இன்றியமையாதது<br>• மனிதனும் சுற்றாடலின் ஒரு கூறாவான்<br>• சுற்றாடல் வளங்கள் வரையறைப்பட்டவை, பயன்படுத்துவதன் விளைவாக அவை தேய்வடையும்<br>• சுற்றாடல் வழங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதோடு, அவற்றை எதிர்கால சந்ததியினருக்காகப் பாதுகாப்பதும் அவசியமாகும். | • தமது அயற்சூழலைப் பாதுகாப்பதற்காகப் பங்களித்தக்க விதத்தைக் குறிப்பிடுவார்.<br>• சுற்றாடல் பாதுகாப்பின் முக்கியத்துவத்தையும் அதன் மூலம் கிடைக்கும் அனுகூலங் களையும் விவரிப்பார்.<br>• தாமும் சூழலின் ஒரு பகுதியே என்பதைக் கருத்திற்கொண்டு செயற்படுதல் வேண்டும் என கருத்துத் தெரிவிப்பார்.<br>• சுற்றாடல் வளங்களை எதிர்காலச் சந்ததிக்காகப் பாதுகாத்து வைப்பதன் முக்கியத் துவத்தை விளக்குவார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 6.3.9 சுதேசத்துவத்தைப் பெருமையுடன் மதிப்பார். | • சுதேசத்துக்குரியவை - அறிமுகம்<br>- சுதேச பண்பாடு<br>- சுதேச வளங்கள்<br>- சுதேச உற்பத்திகள்<br>• சுதேசத்துக்குரியவற்றை மதிப்பதன் முக்கியத்துவம்<br>• சுதேசத்துவத்துக்குரியவற்றைப் பாதுகாத்தல் | • சுதேச பண்பாட்டு அருஞ்செல்வங்கள் தொடர்பான விபரங்களை பெருமையுடன் முன்வைப்பார்.<br>• சுதேச உற்பத்திகள், சுதேசப் பயிர்கள் தொடர்பான தகவல்களைச் சேகரிப்பார்.<br>• சுதேசத்துக்குரியவற்றை மதித்து, அதுதொடர்பான விவகாரங்களைப் பெருமையடன் முன்வைப்பார்.<br>• சுதேச அருஞ்செல்வங்களைப் பாதுகாப்பதற்காகப் பங்களிப்புச் செய்யத்தக்க விதத்தை விளக்குவார். | 03 |

# கற்றல் கற்பித்தல் செயன்முறைக்கான அறிவுறுத்தல்கள்

## 6.1 எமது பாடசாலை

பண்டைய இலங்கையில் கல்வி சமய தாபனங்களை மையமாகக் கொண்டதாக காணப்பட்டது. இதனைத் தவிர குருகுலக் கல்வி முறையும் காணப்பட்டது, அறிமுறைக் கல்வியும் பல்வேறு தொழில்களை அடிப்படையாகக் கொண்ட கைத்திறன் கலைக் கல்வியும் அக்காலக் கலைத்திட்டத்தில் அடங்கியிருந்தன.

எனினும் சமூக விருத்திச் செயன்முறையினூடாக சனத்தொகை அதிகரித்ததோடு மக்களது தேவைகள் மென்மேலும் அதிகரித்ததன் விளைவாக ஒரு சமூகத் தேவை எனக் கருதி அரசினையும் சமூகத்தையும் சேர்ந்த பிரபுக்களாலும் பாடசாலைகள் தாபிக்கும் பணி முன்னெடுக்கப்பட்டது. அதன் விளைவாக தற்காலத்தில் அரச பாடசாலைகளும் தனியார் பாடசாலைகளும் உருவாகியுள்ளன.

தனியாளைச் சமூகத்துக்குத் தேவையானவாறு இசைவுபடுத்தி வழிப்படுத்தும், சமூகமயமாக்கற்காரணிகளுள் பிரதானமான ஒன்று பாடசாலையாகும். எனவே சமூகத்தின் ஒரு பக்கத் தோற்றமாக பாடசாலையைக் குறிப்பிடலாம். சமூகத்தின் இருப்பை உறுதிப் படுத்தும் பிரதானமான காரணி பாடசாலையாகும்.

சமூகத்தில் மக்கள் ஐக்கியமாகச் சகவாழ்வை மேற்கொள்ளும் விதத்தை உறுதிப்படுத்துதல், ஒருவரையொருவர் மதித்தல், பொறுப்புக்களை நிறைவேற்றியவாறு உரிமைகளை அனுபவிக்கத் தூண்டுதல் போன்றவை பாடசாலையினால் ஆற்றப்படும் பிரதானமாக சில பணிகளாகும். அது தவிர, குடும்பத்துக்கு வெளியே நீண்ட கால உறுப்புரிமை பெறும் இடம் என்ற வகையில் பாடசாலையினூடாக பிள்ளை பெருந்தொகையான அனுபவங்களைப் பெறுகின்றது. எனவே பாடசாலைச் சமூகத்தின் உறுப்பினராகியதன் பின்னர், பிள்ளை அதன் தோற்றமும் வளர்ச்சியும், அது கட்டியெழுப்பப்பட்டுள்ள ஒழுங்கமைப்பு தமது தனித்துவத்தை உறுதிப்படுத்துவதன் முக்கியத்துவம், தமது கருமங்களை நன்கு திட்டமிட்டு நிறைவேற்றுவதன் பெறுமானம், பாடசாலை பண்பாட்டை மதித்தல், பாடசாலைக்கும் சமூகத்துக்கும் இடையிலான தொடர்பு போன்றவை பற்றிய விடயங்களைக் கற்கத் தூண்டுவதும், அதனூடாக நன்மனப்பாங்குகளை விருத்தி செய்துகொள்ளச் சந்தர்ப்பமளித்தலுமே இந்த அலகின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

## 6.1 எமது பாடசாலை

**தேர்ச்சி** : உயிரோட்டமான ஓர் உறுப்பினர் என்ற வகையில் பாடசாலைச் சமூகத்தின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்வார்.

**தேர்ச்சி மட்டம்** : 6.1.1 பாடசாலையின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் நுணுகியாய்வார்.

**தேர்ச்சி மட்டம்** : 02

**கற்றற் பேறுகள் :**

- பாடசாலையின் தோற்றம் தொடர்பான அடிப்படைத் தகவல்களை விளக்குவார்.
- பாடசாலையின் ஆரம்பிப்பதற்கு முன்னின்று உழைத்தோரின் சேவையை மதித்துக் கருத்துத் தெரிவிப்பார்.
- பாடசாலை தோற்றம் பெற்ற காலத்தில் கிராமத்தின், நகரத்தின் சமூக, பொருளாதாரப் பின்னணி பற்றிய தகவல்களை முன்வைப்பார்.
- படசாலையினால் ஆற்றப்படும் சேவையை மதித்துக் கருத்துத் தெரிவிப்பார்.

**பாடத் திட்டமிடலுக்குரிய அறிவுறுத்தல்கள் :**

- பாடசாலை தோற்றம் பெற்றதன் பின்னணி
- ஆரம்பிக்கப்படுவதற்கு ஏதுவான காரணங்கள்
  உதாரணம்:- சனத்தொகைப் பெருக்கம்
  - அண்மையில் பாடசாலை இல்லாமை
  - அரச கொள்கைகள்
  - சமூகத்தின் தேவைகள்
- தோற்றம் பெற்ற விதம்:
  உதாரணம் : அரச பாடசாலையாக / தனிப்பட்ட / நன்கொடையாக / பிரமுகர் / தனவந்தர் / கொடைவள்ளல் ஒருவரின் நன்கொடையாக சமய தாபனமாக / சமய தாபனமொன்றை முதன்மையாகக் கொண்டு என்றவாறாக
- தோற்றம் பெறுவதில் முன்னின்று உழைத்த தனியாட்கள்
  உதாரணம்: ஊர்ப்பிரமுகர் / தனவந்தர் ஒருவர் என்றவாறாக
- தோற்றம் பெற்ற இடமும் ஆண்டும்
- பாடசாலையினது வளர்ச்சியின் முக்கியமான கட்டங்கள்
  உதாரணம்: - பாடசாலை மகாவித்தியாலயமாகிய சந்தர்ப்பங்கள்
  - பாடசாலை மத்திய மகாவித்தியாலயமாகிய சந்தர்ப்பங்கள்
- பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதியில் கிராமத்தின் அன்றேல் நகரத்தின் பின்னணி
  உதாரணம்: - சமூகப் பொருளாதார நடவடிக்கைகள்
  - சீவனோபாய வழிகள்
- பாடசாலையிலிருந்து உருவாகிய புகழ் பெற்ற பழைய மாணவர்கள்
  உதாரணம்: - சமூக சேவையாளர்கள்
  - வெவ்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள்

**தரவுள்ளீடுகள் :**

- மேற்படி தேர்ச்சி மட்டத்தை உள்ளடக்கும் வண்ணம் பாடத்தைத் திட்டமிடுகையில் தரவுள்ளீடுகளாக பாடசாலையின் சம்பவத்திரட்டு புத்தகம் (Log book ) பாடசாலையினால் காலத்திற்குக் காலம் வெளியிடப்பட்டுள்ள ஆவணங்கள், சஞ்சிகைகள், மற்றும் தகவலறிந்த நபர்கள் போன்றோரையும் வளவாளர்களாகப் பயன்படுத்துக.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள். :**

- மேற்படி தேர்ச்சி மட்டத்தை உள்ளடக்கும் வண்ணம் திட்டமிடப்பட்டுள்ள பாடத்திற்கேற்ப பாடசாலையின் வரலாறு பற்றி சுவர்ப்பத்திரிகையொன்றைத் தயாரிக்க மாணவரை வழிப்படுத்தி அதன்மூலம் கணிப்பீடு மதிப்பீட்டினை மேற்கொள்க.

---

**தேர்ச்சி** : உயிரோட்டமான ஓர் உறுப்பினர் என்ற வகையில் பாடசாலைச் சமூகத்தின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்வார்.

**தேர்ச்சி மட்டம்** : 6.1.2 பாடசாலையின் ஒழுங்கமைப்பை நுணுகியாய்வார்.

**தேர்ச்சி மட்டம்** : 02

**கற்றற் பேறுகள் :**

- பாடசாலையின் ஒழுங்கமைப்புக் கட்டணம் பருமட்டான திட்டப்படமொன்றின் மூலம் காட்டுவார்.
- பாடசாலையின் வெவ்வேறு பணிகளை ஆற்றுவோர், தத்தமது கடமைகளையும் பொறுப்புக்களையும் செவ்வனே ஆற்றுதலானது பாடசாலையின் விளைதிறன் மீது செல்வாக்குச் செலுத்தும் விதத்தை விளக்குவார்.
- பாடசாலையினது செயலடைவின் பால் ஒவ்வோர் உறுப்பினரதும் உயிரோட்டமான பங்களிப்பு கிடைப்பதன் அவசியத்தை ஏற்றுக் கருத்துத் தெரிவிப்பார்.
- படசாலையினுள் ஆற்றப்படும் சேவையை மதித்துக் கருத்துத் தெரிவிப்பார்.

**பாடத் திட்டமிடலுக்குரிய அறிவுறுத்தல்கள் :**

- பின்வரும் பாடவிடயங்களை உள்ளடக்கும் வண்ணம் பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்க.
- பாடசாலையின் ஒழுங்கமைப்பு
    - பாடசாலையின் மாணவர் தொகைக்கும் ஆசிரியர் தொகைக்குமேற்ப ஒழுங்கமைப்பு
    - வேறுபட இடமுண்டு உங்களது பாடசாலையின் ஒழுங்கமைப்பை முன்வையுங்கள்.
    - பாடசாலையினது ஒழுங்கமைப்பில் வெவ்வேறு வகிபாகங்கள் மற்றும் பதவிகளுக்குரிய பொறுப்புக்களும் கடமைகளும்
        - அதிபர்
        - ஆசிரியர்கள்
        - கல்விசாராப் பணியணியினர்

- பல்வேறு பதவிகளை வகிப்போர் தமது கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றுவதன் மூலம் பாடசாலையின் வெற்றிக்குப் பங்களிப்புச் செய்யும் விதம்
- ஒவ்வோர் உறுப்பினரும் பாடசாலையின் ஒழுங்கமைப்பில் பங்காளியாகின்றமை

**தரவுள்ளீடுகள் :**

- பாடசாலையின் ஒழுங்கமைப்பை பருமட்டாக அமைத்துக் கொள்க. (பாடநூலில் மாதிரி காணப்படுகின்றது)

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றற் பேறுகளை அடைந்து கொள்ளும் வகையில் பாடசாலையின் ஒழுங்கமைப்பிலுள்ள பதவிகள், அவற்றுக்குரிய கடமைகளும் பொறுப்புக்களும் பற்றி மாணவர் முன்வைக்கும் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை மேற்கொள்க.

---

**தேர்ச்சி** : உயிரோட்டமான ஓர் உறுப்பினர் என்ற வகையில் பாடசாலைச் சமூகத்தின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்வார்.

**தேர்ச்சி மட்டம்** : 6.1.3 பாடசாலைச் சமூகத்தின் உறுப்பினர் என்ற வகையில் தம்மைப் பற்றிய தகவல்களின் அவசியத்தை ஆராய்வார்.

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள் :**

- பாடசாலையில் தமது தனித்துவத்தை வளர்த்துக் கொள்ளத் துணையாகும் தகவல்களை வழங்குவார்.
- தம்மிடமுள்ள நற்பண்புகளை இனங்கண்டு அவற்றை வளர்த்துக்கொள்ள ஆவன செய்வார்.
- தமது குறைகளை இனங்கண்டு அவற்றைக் குறைத்துக் கொள்ள ஆவன செய்வார்.
- தாம் எதிர்கொள்ளும் தடைகளை இனங்கண்டு அவற்றை வெற்றி கொள்வதற்காக முயற்சியுடன் செயற்படுவார்.
- தமது விருத்திக்காகப் பாடசாலையினால் வழங்கப்படும் சந்தர்ப்பங்களை உச்ச அளவில் பயன்படுத்திக் கொள்வார்.

**பாடத் திட்டமிடலுக்குரிய அறிவுறுத்தல்கள் :**

பாடசாலை மாணவன் என்ற வகையில் தமது தனித்துவத்தை வளர்த்துக் கொள்வதற்கும் தமது திறமைகளை விருத்தி செய்து கொள்வதற்கும் துணையாகும் தகவல்களைப் பாடநூலில் தரப்பட்டுள்ள வகையில் கலந்துரையாடுங்கள்.

- தமது தனித்துவத்தை வளர்த்துக் கொள்ளத் துணையாகும் தகவல்கள்.
- தம்மிடத்தே காணப்படும் நற்பண்புகள்
- தமது திறமைகள்
  உதாரணம்: கல்வி நடவடிக்கைகள் / விளையாட்டு நடவடிக்கைகள் /பாடஇணைச் செயற்பாடுகள் / நல்ல சமூகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளல்/ அழகியல் தொழிற்பாடுகள் / நேரத்தை விளைதிறனுடையவாறு பயன்படுத்துதல்.

- தமது குறைபாடுகளை இனங்காணல்.
    - ஒவ்வொரு மாணவனுக்கும் தமது குறைபாடுகளை இனங்கண்டு கொள்ள உதவுதல்
    - அவற்றைக் குறைத்துக் கொள்வதற்காக எடுக்கத்தக்க நடவடிக்கைகளை விளக்குதல்.
- தாம் எதிர்நோக்கும் தடைகள் /அறைகூவல்கள்
    - தாம் எதிர்பார்க்கப்படும் இலக்கைநோக்கிச் செல்லும் போது எதிர்ப்படும் தடைகளை இனங்காணச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தல்.
    - அத்தடைகளை /அறைகூவல்களை வெற்றி கொள்வதற்காக எடுக்கத்தக்க நடவடிக்கைகளை எடுத்துரைத்தல்
    - தமது அபிவிருத்திக்காகப் பாடசாலையினூடாகக் கிடைக்கும் வாய்ப்புக்கள்.

      உதாரணம்: நற்கல்வி வழங்கப்படுதல்<br>விளையாட்டுப் பயிற்சியும் தலைமைத்துவப் பயிற்சியும்<br>நன்மனப்பாங்கு விருத்தி<br>சமூகத்திறன் விருத்தி
    - சிறந்த சமூக வாழ்க்கை வாழ்வதற்காக, வாழ்க்கையின் இலக்குகளை உருவாக்கிக் கொள்ள வழிகாட்டுதல்.
        - வாழ்க்கையின் மேற்படி இலக்குகளை வெற்றி கொள்வதற்காகவும் விருத்தி செய்து கொள்வதற்காகவும் சந்தர்ப்பங்களை உருவாக்குதல்.

**தரவுள்ளீடுகள் :**

- தமது தனித்துவத்தைக் கட்டுப்படுத்தும் தகவல்களைப் பெற்றுக் கொள்ளப் பொருத்தமான சுயவிபரக் கோவையொன்றைத் தயாரித்துக் கொள்க. மாதிரி இணைப்பு 6.1.3.1 இல் தரப்பட்டுள்ளது.
- எமது நற்பண்புகள், குறைபாடுகள் ஆகியவற்றை எழுதுவதற்காக சுயமதிப்பீட்டுப் படிவமொன்றைப் பயன்படுத்துக.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- சுயவிபரக் கோவையையும் சுயமதிப்பீட்டுப் படிவத்தையும் பூர்த்தி செய்வதை மதிப்பீட்டுக்கு உட்படுத்தி நிதிகளுக்கேற்ப கணிப்பீட்டு, மதிப்பீட்டினை மேற்கொள்க.

**இணைப்பு**

## சுயவிபரக் கோவை

1. முதலெழுத்துக்களுடன் பெயர் : ........................................................................

2. பிறந்த திகதி : ........................................................................................

3. இவ்வருட ஜனவரி 01ஆம் திகதியன்று வயது : ........................................................

   வருடம் : ........................ மாதம் : ...................... நாட்கள் : .......................

4. தனிப்பட்ட முகவரி : .......................................................................................

5. தொலைபேசி எண் : .........................................................................................

   (காணப்படுமாயின் மட்டும்)

6. அவசர சந்தர்ப்பத்தில் அறிவிக்க வேண்டியவரின்

   பெயரும், முகவரியும் : ..................................................................................

   அவரின் தொலைபேசி இலக்கம் : .........................................................................

   (காணப்படுமாயின்)

7. உங்களது பாடசாலையின் பெயர் : .....................................................................

8. முகவரி : ....................................................................................................

9. பாடசாலையின் தொலைபேசி இலக்கம் : ..............................................................

10. பாடசாலையில் சேர்ந்த திகதி : ......................................................................

11. உமது வசிப்பிடத்திற்கான தூரம் : ....................................................................

..........................................

கையொப்பம்

**தேர்ச்சி** : உயிரோட்டமான ஓர் உறுப்பினர் என்ற வகையில் பாடசாலைச் சமூகத்தின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்வார்.

**தேர்ச்சி மட்டம்** : 6.1.4 பாடசாலைச் சமூகத்தின் ஓர் உறுப்பினர் என்ற வகையில் தமது கருமங்களைத் திட்டமிட்டு ஒழுங்கமைத்து நிறைவேற்றுவார்.

**பாடவேளைகள்** : 03

**கற்றற் பேறுகள் :**

- தமது நாளாந்த கருமங்களைத் திட்டமிட்டு நிறைவேற்றுவார்.
- தமது கருமங்களை நன்கு திட்டமிட்டு, ஒழுங்கமைத்து நிறைவேற்றுவதன் முக்கியத்துவத்தை மதித்துக் கருத்துத் தெரிவிப்பார்.
- வெவ்வேறு சந்தர்ப்பங்களில் திட்டமிட்டு ஒழுங்கமைத்துச் செயற்படும் திறனை வெளிக்காட்டுவார்.

**பாடத் திட்டமிடலுக்குரிய அறிவுறுத்தல்கள் :**

- நாளாந்தக் கருமங்களைத் திட்டமிட்டு நிறைவேற்றுதல்.
  அதிகாலையில் நித்திரைவிட்டு எழுந்ததிலிருந்து இரவு நித்திரைக்குச் செல்லும் வரையிலான கருமங்களை நன்கு திட்டமிட்டு ஒழுங்மைத்து நிறைவேற்றுவதன் முக்கியத்துவம்.
  உதாரணம்:
  - குறித்த நேரத்துக்கு முன்னரே பாடசாலைக்குச் செல்லுதல்.
  - நேரசூசிப்படி புத்தகங்கள், ஏனைய பொருள்களை எடுத்துச் செல்லல்.
  - பாடசாலை நேரசூசிப்படி செயற்படுதல்.
  - நேரத்தை விளைதிறனுடையவாறு பயன்படுத்துதல்.
  - வகுப்பறை மற்றும் பாடசாலைச் சுத்திகரிப்புக் கருமங்களைத் திட்டமிடுவதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் துணைபுரிதல்.
  - சுற்றாடலை அழகுபடுத்தும் கருமங்களை மேற்கொள்ளல்.
  - பாடசாலையிலும் வகுப்பறையிலும் விசேட சந்தர்ப்பங்களின் போது திட்டமிட்டுச் செயற்படுதல்.
    உதாரணம்: விளையாட்டு விழா / கலை நிகழ்ச்சி / பரிசளிப்பு விழா / ஆசிரியர் சேவை நலன் பாராட்டு விழா /சிறுவர் தின விழா (இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தைத் திட்டமிடுமாறு மாணவரை வழிப்படுத்துங்கள்)

**தரவுள்ளீடுகள் :**

- அதிகாலையில் நித்திரை விட்டெழுந்ததிலிருந்து இரவு நித்திரைக்குச் செல்லும் வரையிலான கருமங்களை முறையாக நிறைவேற்றுவதற்கு நாளாந்த நேரசூசியைத் தயாரித்தல், வகுப்பறையைச் சுத்தப்படுத்தல், பாடசாலைத் தோட்டத்தை அலங்கரிப்பதற்காகன பொருத்தமான திட்டமொன்றைத் தயாரிப்பதற்குத் தேவையான பொருட்களைத் தருவித்துக் கொள்க.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- ஒப்படைக்கப்பட்டுள்ள வேலையை நிறைவேற்றும் விதத்தைக் கருத்திற் கொண்டு கணிப்பீடு மதிப்பீட்டை மேற்கொள்க.

**தேர்ச்சி** **:** உயிரோட்டமான ஓர் உறுப்பினர் என்ற வகையில் பாடசாலைச் சமூகத்தின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்வார்.

**தேர்ச்சி மட்டம்** : 6.1.5 பாடசாலைப் பண்பாட்டில் நடைமுறையில் உள்ள சட்டதிட்டங்களுக்கும் மரபுகளுக்கும் இணங்க நடப்பார்.

**பாடவேளைகள்** : 04

**கற்றற் பேறுகள் :**

- பாடசாலையின் சீரான இருப்புக்காக சட்டதிட்டங்கள் அவசியத்தை விளக்குவார்.
- பாடசாலையில் காணப்படும் மரபுகளை இனங்கண்டு அவற்றுக்கு இசைவடைவார்.
- சட்டதிட்டங்களை மதிப்பதன் மூலம் ஏனையோரின் உரிமைகள் பாதுகாக்கப்படும் என்பதை ஏற்று அதற்கமையச் செயற்படுவார்.
- தமது கடமைகள் பொறுப்புக்களை நிறைவேற்றுவதன் ஊடாக பாடசாலையின் நற்பெயரையும் கௌரவத்தையும் பாதுகாப்பதற்காகப் பங்களிப்புச் செய்வார்.
- பாடசாலையின் தனித்துவத்தைப் பிரதிபலிக்கும் குறியீடுகளை மதிப்பார்.

**பாடத் திட்டமிடலுக்குரிய அறிவுறுத்தல்கள் :**

- பாடசாலைக்கென சட்டதிட்ட முறைமையொன்று தேவைப்படுவதற்காக காரணங்கள்
  - பாடசாலையின் நல்ல இருப்புக்கு
  - பாடசாலையின் மூலம் எதிர்பார்க்கப்படும் குறிக்கோள்களை நிறைவு செய்து கொள்வதற்கு
  - பாடசாலை உறுப்பினர்களின் உரிமைகளைப் பேணுவதற்கு
- சட்டதிட்டங்கள் தொடர்பாக அறிவூட்டம் பெறுவதன் முக்கியத்துவம்.
  - சட்டதிட்டங்களைச் சீராகப் பின்பற்றுவதற்காக
  - ஏனையோரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக
  - தமது உரிமைகளை அனுபவிப்பதற்காக
  - தமது கடமைகளையும் பொறுப்புக்களையும் செவ்வனே நிறைவேற்றுவதற்காக
- சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்படுதல்
  - சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்படுதலானது பாடசாலையின் நன்மைக்குக் காரணமாகின்றமை
  - சட்டதிட்டங்களை மீறுதலானது பாடசாலையின் நற்பெயருக்கு களங்கமாக /பாதகமாக அமைகின்றமை
- பாடசாலையில் நடைமுறையில் உள்ள சட்டதிட்டங்கள்
  - உரிய நேரத்துக்கு முன் பாடசாலைக்கு பாடசாலைக்கு வருகை தருதல்
  - உரிய நியமங்களின்படி தயாரிக்கப்பட்ட சீருடை அணிந்து பாடசாலைக்கு வருகை தருதல்
  - பாடசாலை நேரத்தில் பாடசாலையில் தங்கியிருத்தல்
  - பாடசாலை நேரசூசிப்படி, கற்கைக் கருமங்களில் ஈடுபடுதல்
  - அதிபருக்கும் ஆசிரிய ஆசிரியைகளுக்கும் மதிப்பளித்தல்
  - மாணவர் தலைவர்கள் / தலைவிகளுக்கும் வகுப்புத் தலைவர்களுக்கும் மதிப்பளித்தல், சகோதர மாணவர்களுக்கு மதிப்பளித்தல்.

- மரபுகள்
  - மரபுகளை இனங்காணலும் மதித்தலும்
  - மரபுகளைப் பேணிக்காத்தலின் முக்கியத்துவம்

    உதாரணம்: தமது பாடசாலையில் காலைக்கூட்டம் தொடர்பான மரபுகள் விளையாட்டு விழாக்கள், பரிசளிப்பு விழாக்கள் போன்றவை சார்ந்த மரபுகள்

  (தமது பாடசாலைக்கேயுரித்தான மரபுகளை இனங்கண்டு அவற்றுக்கு இசைவடைவதன் முக்கியத்துவத்தை விளக்குவார்.)
- மரபுகளைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம்
  - பாடசாலையின் தனித்துவத்தைப் பாதுகாத்தல்
  - எதிர்கால மாணவ சந்ததிக்கு அவற்றை ஒப்படைத்தல்
  - பாடசாலையின் நற்பெயரைப் பேணுதல்.
  - மாணவரிடத்தே கட்டுப்பாட்டைக் கட்டியெழுப்புதல்
  - சுயஅபிமானத்துடன் செயற்படுவோர் உருவாதல்

- பாடசாலையின் தனித்துவத்தை வெளிப்படுத்தும் குறியீடுகள்

  **பாடசாலைக் கீதம்**
  - பாடசாலைக் கீதத்தின் அவசியம்
  - பாடசாலையைத் தாயாகக் கருதி பெரும்பாலான பாடசாலைக் கீதங்கள் இயற்றப்பட்டிருத்தல்
  - பாடசாலைக் கீதத்தின் பொருளை விளக்குதல்
  - பாடசாலைக் கீதத்தைப் பாடும் சந்தர்ப்பங்கள்
  - பாடசாலைக் கீதத்தைப் பாடும் சந்தர்ப்பத்தில் உரியவாறு மதிப்பளித்தல்
  - பாடசாலைக் கீதத்தைப் பாடுவதற்கு மாணவருக்கு செய்முறைப் பயிற்சி வழங்குங்கள்.

  **பாடசாலைக் கொடி**
  - நிறங்கள், குறியீடுகளால் குறிக்கப்படுபவை
  - கொடியை ஏற்றும் சந்தர்ப்பங்கள்
  - கொடியை ஏற்றும் சரியான முறை
  - பாடசாலைக் கொடிக்கு மதிப்பளிக்கும் விதம்
  - பாடசாலைக் கொடிக்கு மதிப்பளிப்பதன் முக்கியத்துவம்

  **பாடசாலைச் சீருடை**
  - எளிமையானது
  - சீரானது
  - சமமானது
  - பாடசாலையின் தனித்துவம் சீருடையின் மூலம் காட்டப்படுகின்றமை
  - சீருடையின் கௌரவத்தைப் பாதுகாப்பதன் அவசியம்

  **பாடசாலை இலச்சினை**
  - நிறங்கள், குறியீடுகளால் குறிக்கப்படுபவை
  - பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள்

    உதாரணம்: பாடசாலைச் சீருடையுடன்பாடசாலையிலிருந்து வழங்கப்படும் ஆவணங்களில் பாடசாலையின் இலச்சினை மூலம் பாடசாலையின் உரித்து உணர்த்தப்படுகின்றமை

**பாடசாலை மகுட வாசகம்**
- அது கூறும் கருத்து
- அது வாழ்க்கைக்கு முன்மாதிரியாக அமைதல் வேண்டும்

- பாடசாலையின் தொலை நோக்கும் பணிக்கூற்றும்
  - பாடசாலைத் தொலைநோக்கின் மூலம் கூறப்படுவது
  - பாடசாலையின் பணிக் கூற்றினால் கூறப்படுவனற்றை நிறைவேற்றிக் கொள்வதற்காக பாடசாலையினால் ஆற்றப்படும் பணிகள்
  - பொதுவான வகையில் பாடசாலை தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள சான்றோர் கருத்துக்கள்

**தரவுள்ளீடுகள் :**
- பாடசாலைக் கீதத்தின் பிரதி, பாடசாலை இலச்சினை, பாடசாலைக் கொடி மற்றும் தேவை ஏனைய பொருட்களை உரியவாறு தருவித்துக் கொள்ளவும். முடியுமாயின் பாடசாலையின் சங்கீத ஆசிரியரின் ஒத்துழைப்பைப் பெறவும்

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**
- ஒவ்வொரு பாடத்திற்குமேற்ப மாணவர்கள் ஒன்றுபட்டும் தனியாகவும் செய்யும் செயற்பாடுகளைக் கருத்திற் கொண்டு கணிப்பீடு மதிப்பீட்டை மேற்கொள்க.

---

**தேர்ச்சி** : உயிரோட்டமான ஓர் உறுப்பினர் என்ற வகையில் பாடசாலைச் சமூகத்தின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்வார்.

**தேர்ச்சி மட்டம்** : 6.1.6 பாடசாலைச் சமூகத்தின் ஓர் உறுப்பினர் என்ற வகையில் தமது உரிமைகளை அனுபவித்தவாறு அவற்றுடன் இணைந்த கடமைளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றுவார்

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள் :**
- பாடசாலையில் ஒவ்வொரு மாணவனுக்கும் மாணவிக்கும் சமமான உரிமைகள் உரித்தாகும் என்பதை ஏற்றுக் கருத்துத் தெரிவிப்பார்.
- பாடசாலை மாணவர் என்ற வகையில் தமது உரிமைகளை அனுபவித்தவாறு அதனுடன் இணைந்த பொறுப்புக்களை நிறைவேற்றுவதன் முக்கியத்துவத்தை விளக்குவார்.
- பாடசாலைச் சமூகத்தின் ஓர் உறுப்பினர் என்ற வகையில் சக வாழ்வுடனும் சமத்துவமாகவும் செயற்படுவார்.
- பாடசாலையின் பௌதிகச் சூழலைப் பாதுகாப்பதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவார்.

**பாடத் திட்டமிடலுக்குரிய அறிவுறுத்தல்கள் :**
- பாடசாலை மாணவன் அன்றேல் மாணவி என்ற வகையில் தமக்குரிய உரிமைகள் உதாரணம்:
  - கற்கும் உரிமை
  - விளையாட்டு மற்றும் களிப்பூட்டும் நடவடிக்கைகளில் பங்குபற்றும் உரிமை
  - நூலகத்தைப் பயன்படுத்தும் உரிமை

- பாதுகாப்புப் பெறும் உரிமை
- தமது திறன்களை விருத்தி செய்து கொள்ளும் உரிமை
- அவ்வுரிமைகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்
  உதாரணம்:
  - இலவசமாகக் கல்வி வழங்குதல்
  - இலவசமாக பாடசாலைச் சீருடையும் பாடநூல்களும் வழங்குதல்
  - நூலக, ஆய்வுகூட வசதிகள் வழங்குதல்
- அவ்வுரிமைகளுடன் இணைந்த கடப்பாடுகள்
  உதாரணம்:
  - ஒழுக்கத்தைப் பேணி நடத்தல்
  - நன்றாகக் கல்வி கற்றல்
  - தமது திறன்களை விருத்தி செய்து கொள்ளல்
  - பாடசாலை உபகரணங்களைப் பாதுகாத்தல்
  - பாடசாலைச் சட்டதிட்டங்களையும் மரபுகளையும் மதித்தல்
  - பாடசாலையின் ஏனைய உறுப்பினர்களை மதித்தல்
  - பாடசாலையின் நற்பெயருக்கோ கௌரவத்துக்கோ பங்கம் ஏற்படாதவாறு நடந்து கொள்ளல்.
  - தமது தனித்துவத்தைப் பாதுகாத்தல்
  - சமத்துவத்துடனும் சகவாழ்வுடனும் செயற்படுதல்
  - பாடசாலையின் பௌதிகச் சூழலைப் பாதுகாப்பதற்காக நடவடிக்கை எடுத்தல்.
- பாடசாலைச் சமூகம் பல்வகைமையுடையது
  உதாரணம்: ஆண் - பெண், மக்களினம், வயது என்பவற்றுக்கு அமைய
- பாடசாலைச் சமூகத்தில் ஒவ்வொரு மாணவனுக்கும் மாணவிக்கும் சமமான உரிமைகள் உரித்தாகும்.

**தரவுள்ளீடுகள் :**

- செயற்பாடுகளுக்காக மாணவருக்கு வழங்குவதற்குப் போதியளவு செயற்பாடுகளுக்குப் பாத்திரங்களைத் தயாரித்துக் கொடுத்தல்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- மாணவர் உரிமைகள் மற்றும் கடமைகள் தொடர்பில் தெரிவிக்கும் கருத்துக்கள், பாதுகாப்பிற்கும் இருப்பிற்கும் பங்குபற்றுதலுக்கும் அபிவிருத்திக்குமுள்ள உரிமைகள பற்றி செயற்பாடுகளில் காண்பிக்கும் துலங்கல்களுக்கேற்ப கணிப்பீடு, மதிப்பீட்டை மேற்கொள்க.

**தேர்ச்சி** : உயிரோட்டமான ஓர் உறுப்பினர் என்ற வகையில் பாடசாலைச் சமூகத்தின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்வார்.

**தேர்ச்சி மட்டம்** : 6.1.7 ஆசிரியர் - மாணவர் கடமைகள் தொடர்பான விளக்கத்துடன் செயற்படுவார்.

**பாடவேளைகள்** : 01

**கற்றற் பேறுகள் :**

- மாணவர்கள் தமது ஆசிரியர்களுக்காக நிறைவேற்ற வேண்டிய கடமைகளை இனங்கண்டு அவற்றுக்கு அமைவாகச் செயற்படுவார்.
- ஆசிரியர்கள் தமது மாணவர்களுக்காக நிறைவேற்ற வேண்டிய கடமைகளை நிறைவேற்றுவதன் முக்கியத்துவத்தை விளக்குவார்.
- மாணவர்கள் பரஸ்பரம் தம்மிடையே கடமைகளை நிறைவேற்றுவதன் முக்கியத்துவத்தை விவரிப்பார்.

**பாடத் திட்டமிடலுக்குரிய அறிவுறுத்தல்கள் :**

- ஆசிரியருக்கும் மாணவருக்கும் இடையே பரஸ்பரம் கடமைகளும் பொறுப்புக்களும் நிறைவேற்றப்படுதலானது கல்விச் செய்முறையின் வெற்றி மீது பெரிதும் பங்களிப்புச் செய்கின்றமையை வலியுறுத்துவது முக்கியமானது.
- மாணவர்கள் தமது ஆசிரியர்களுக்காக நிறைவேற்ற வேண்டிய பொறுப்புக்கள்
    - ஆசிரியரைக் கண்டவுடன் எழுந்து நிற்றல்
    - தேவைப்படும் சந்தர்ப்பங்களில் உதவி புரிதல்
    - ஆசிரியரது புத்திமதிகளையும் ஆலோசனைகளையும் ஏற்றுச் செயற்படுதல்
    - ஆசிரியருடன் நல்ல தொடர்பைப் பேணியவாறு மிக நன்றாக கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடுதல்
    - ஆசிரியருக்குக் கட்டுப்படுதலும், நன்கு செவிமடுத்தலும்
- ஆசிரியர்கள் தமது மாணவர்க்காக நிறைவேற்ற வேண்டிய பொறுப்புக்கள்
    - மாணவரை ஒழுக்கசீலர்களாக்குதல்
    - நன்கு கிரகித்துக்கொள்ளத்தக்கவாறு இலகுவாக விளங்கிக் கொள்ளத்தக்கவாறு கற்பித்தற் பணிகளை ஒழுங்கு செய்தலும் நடைமுறைப்படுத்தலும்
    - ஆலோசனை வழங்கல் மற்றும் வழிகாட்டல் சேவை மூலம் நல்வழிகாட்டல்
    - நல்ல சமூக வாழ்க்கை வாழ்வதற்குத் தேவையான அறிமுறை அறிவையும் செயற்பாட்டையும் வழங்குதல்
    - மாணவரை சமூகத்தின் பால் அறிமுகஞ் செய்தல்
    - மாணவர்க்குத் தேவையான பாதுகாப்பையும் கவனிப்பையும் வழங்குதல்
- மாணவர்கள் பரஸ்பரம் தமக்கிடையே நிறைவேற்ற வேண்டிய பொறுப்புக்களும் கடமைகளும்
    - ஒத்துழைத்துச் செயற்படுதல்
    - ஏனையோரின் உரிமைகளை மதித்தல்
    - சமத்துவத்துடன் செயற்படுதல்
    - சரியான ஆலோசனைகளை வழங்கி வழிகாட்டுதல்
    - நற்செயல்களின்பால் வழிப்படுத்துதல்
    - தேவைப்படும் சந்தர்ப்பங்களில் சகோதர மாணவர்களுக்கு உதவி புரிதல்
    - விசேட தேவையுடைய மாணவர்களுக்கு (உள்ளனராயின்) உதவிபுரிதல்

**தரவுள்ளீடுகள் :**

- மேற்படி பாடத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஆசிரியர்கள், மாணவர்கள் கடமைகள் பற்றி விளக்குவதற்குப் பொருத்தமான வளவாளர்களைப் பயன்படுத்துக.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- ஆசிரியர் மாணவர் கடமைகள் பற்றிய மாணவரின் அறிவையும், துலங்கல்களையும் கருத்திக் கொள்க.

---

**தேர்ச்சி** : உயிரோட்டமான ஓர் உறுப்பினர் என்ற வகையில் பாடசாலைச் சமூகத்தின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்வார்.

**தேர்ச்சி மட்டம்** : 6.1.8 பாடசாலைக்கும் சமூகத்துக்கும் இடையிலான தொடர்புகளை ஆராய்வார்.

**பாடவேளைகள்** : 04

**கற்றற் பேறுகள் :**

- பாடசாலைக்கும் சமூகத்துக்கும் இடையில் காணப்படும் பரஸ்பர தொடர்புகளின் தன்மையை விபரிப்பார்.
- பாடசாலைக்கும் சமூகத்துக்கும் இடையிலான தொடர்பானது சமூக அபிவிருத்திக்குத் துணையாகும் விதத்தை விவரிப்பார்.
- பாடசாலையைப் பாதுகாத்தலானது சமூகத்தின் கடமையும் பொறுப்புமாகும் என்பதை விளக்குவார்.
- பிள்ளைநேயப் பாடசாலைச் சமூகமொன்றினைக் கட்டியெழுப்புவதற்காக ஆசிரியர் களதும் மாணவர்களதும் பணிகளை விளக்குவார்.

**பாடத் திட்டமிடலுக்குரிய அறிவுறுத்தல்கள் :**

- பாடசாலைக்கும் சமூகத்துக்கும் இடையிலான பரஸ்பர தொடர்புகள் காணப்படுதல்
  உதாரணம்:
  - சமூகத்தின் நல்ல இருப்புக்குத் தேவையான வழிகாட்டலும் பயிற்சியும் பாடசாலையினூடாகக் கிடைத்தல்.
  - பண்பாட்டைக் கையளிப்பதற்கான பாரிய பணி பாடசாலையினால் ஆற்றப்படுகின்றமை
- பாடசாலையினால் சமூகத்துக்கு வழங்கப்படும் சேவைகள்
- சமூகத்தினால் பாடசாலைக்கு வழங்கப்படும் சேவைகள்
  உதாரணம்:
  - பாடசாலையின் அபிவிருத்திப்பணிகளுக்குத் துணை புரிதல்
- பாடசாலை வசமுள்ள சொத்துக்களைப் பாதுகாத்தல்
- பாடசாலைக்கும் சமூகத்துக்கும் இடையே காணப்படும் பல்வேறு தொடர்புகள்
  - பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் ஊடாக, பாடசாலையுடன் சமூகம் தொடர்புறுதல்.
  - பாடசாலை மேம்பாட்டுக்கு குழுவின் மூலம் பாடசாலையின் அபிவிருத்தியில் பங்களிப்புச் செய்தல்.
  - பழைய மாணவர் சங்கமும் நலன்விரும்பிகளுமாக பாடசாலையின் மேம் பாட்டுக்குப் பங்களிப்புச் செய்தல்.
  - மக்கட் பிரதிநிதிகள், அரச நிறுவனங்கள், மற்றும் அரசு சாராத நிறுவனங்கள் பாடசாலைக்கு உதவி புரிதல்.

- அத்தொடர்புகளைப் பாடசாலையினதும் சமூகத்தினதும் மேம்பாட்டுக்காகப் பயன்படுத்தும் விதம்
- பாடசாலையின் இருப்புக்கு சமூகமும் சமூகத்தின் இருப்புக்காகப் பாடசாலையும் தேவைப்படுதல்.
- பாடசாலையைப் பாதுகாப்பது சமூகத்தின் கூட்டுப் பொறுப்பாகும்.
- பிள்ளை நேயப் பாடசாலையொன்றினைக் கட்டியெழுப்புவதில் ஆசிரியர்கள், மாணவர்கள், மற்றும் சமுதாயத்தின் பொறுப்புகள்.

**தரவுள்ளீடுகள் :**

- பாடசாலைக்கும் சமூகத்திற்கும் இடையிலான தொடர்புகளைக் காட்டும் பல்வேறு செயற்பாட்டுப்பத்திரங்கள், பிள்ளை நேயப் பாடசாலை பற்றிய விபரங்கள் மற்றும் வளவாளர்களையும் தளஉள்ளீடுகளாகப் பயன்படுத்தவும்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- பாடசாலைக்கும் சமூகத்திற்குமிடையிலான தொடர்பு, பாடசாலையைப் பாதுகாத்தல், பிள்ளைநேயப் பாடசாலை பற்றிய மாணவரின் துலங்கல்கள், கலந்துரையாடலில் பங்குபற்றல், செயற்பாடுகளின் போதான முன்னேற்றம் போன்றவற்றைக் கருத்திற் கொண்டு மதிப்பீடுகளை மேற்கொள்க.

## 6.2. நாம் வாழும் பிரதேசம்

மனிதர் ஒவ்வொருவரும் சமூகப் பிராணிகளாதலால் எவரும் சமூகத்திலிருந்து விலகித் தனித்து வாழ்வது சாத்தியமானதல்ல. எனவே சமூகத்தில் வாழும் ஒவ்வொருவரும் சமூகத்துடன் இசைவடைவது முக்கியமானது. அத்தோடு சமூகப் பல்வகைமையை மதிப்பதும் அவசியமானதாகும்.

மேலும் ஒவ்வொருவரும் தாம் பிறந்த பிரதேசத்தின்பால் முனைப்புடன் செயற்படுவதும் அதன் மனித, பௌதிக வளங்கள் தொடர்பான கவனத்துடன் செயற்படுவதும் முக்கியமானது. தாம் வாழும் பிரதேசத்தின் அமைவையும் அதன் வளங்களையும் மதித்து, அவற்றைப் பாதுகாப்பதற்குத் தேவையான ஆர்வத்தை ஏற்படுத்துவது அவசியமாகும். தமது பிரதேச மக்களுடனும் ஒட்டுமொத்தமான பிரசைகளுடன் கூட்டாகவும் சகவாழ்வுடனும் செயற்படும் தேர்ச்சி ஒவ்வொருவரிடத்தேயும் வளர்க்கப்படுதல் அவசியமாகும்.

எனவே தாம் வாழும் பிரதேசத்தின் மனித, பௌதிக வளங்களை இனங்காண்பதோடு அவற்றைக் கையாளல், பாதுகாத்தல், கூட்டாக வாழ்வதன் முக்கியத்துவம், தமது தேவைகளை இலகுபடுத்திக் கொள்வதற்கு உதவி புரியும் தனியாட்களும் நிறுவனங்களும் இவை பற்றிக் கற்கச் சந்தர்ப்பமளித்தலும் இந்த அலகின் மூலம் எதிர்பார்க்கப்படுவதாகும்.

## 6.2 நாம் வாழும் பிரதேசம்

**தேர்ச்சி** : பிரதேசத்தில் உள்ள மனித, பௌதிக வளங்களை சமூகத்தின் சிறந்த இருப்புக்குத் துணையாகக் கொள்வார்.

**தேர்ச்சி மட்டம்** : 6.2.1 தாம் வாழும் பிரதேசத்தின் வளங்களை மதித்து, அவற்றைப் பாதுகாக்க ஆவன செய்வார்.

**பாடவேளைகள்** : 07

**கற்றற் பேறுகள் :**
- தமது பிரதேசத்தின் அமைவை, நிருவாக அலகுகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குவார்.
- தமது பிரதேசத்தின் பௌதிக, மனித வளங்களை இனங்கண்டு பெயரிடுவார்.
- பிரதேசத்தின் பௌதிக வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல் மற்றும் பாதுகாத்தலின் முக்கியத்துவத்தை விளக்குவார்.
- மனிதவள விருத்திக்காக மேற்கொள்ளத்தக்க நடவடிக்கைகளைப் பிரேரிப்பார்.

**பாடத் திட்டமிடலுக்குரிய அறிவுறுத்தல்கள் :**

**தமது பிரதேசத்தின் அமைவு**
- தாம் வாழும் பிரதேசத்தின் அமைவை, நிருவாக அலகுகளை அடிப்படையாகக் கொண்டு கற்றறியுமாறு மாணவரை வழிப்படுத்துங்கள்.
  - மாகாணம்
  - மாவட்டம்
  - பிரதேசச் செயலாளர் பிரிவு
  - கிராம அதிகாரி பிரிவு - பெயர் /இலக்கம்
  - உள்ளூராட்சி நிறுவனம்
  - கிராமத்தின் /ஊரின் பெயரும் அப்பெயர் வழங்கப்படுவதற்கு ஏதுவான விசேட காரணமும் (உண்டெனின் கர்ண பரம்பரைக் கதை அன்றேல் வேறு கதைகள் ஊடாக)
  - பிரதேசம் அடங்கியுள்ள மாவட்டத்தைச் சூழவுள்ள மாவட்டங்களை இனங்காணல்
  - பிரதேசத்தில் அமைந்துள்ள வரலாற்று முக்கியத்துவமுடைய இடங்கள் (பெயர்களை மாத்திரம் அறிந்து கொள்வது போதுமானது)
  - பிரதேசத்தில் அமைந்துள்ள சமய வழிபாட்டுத்தலங்கள்
- காணொளிக் காட்சி இலக்கம் 07 இல் தாம் வாழும் பிரதேசத்தின் வளங்கள் பற்றிய விபரங்களடங்கிய காட்சியைக் கண்டுகளிக்க மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கவும்.

**பிரதேசத்தில் காணப்படும் வளங்கள்**

- பிரதேசத்தில் காணப்படும் வளங்களைக் கொண்டு அபிவிருத்தியில் பங்களிப்புச் செய்யும் மனிதன், மனித வளமாவான்.

**பௌதிக வளங்கள்**

உதாரணம்: வளி / நீர் / மண் / கனியங்கள் /மலைகள், நீர் வீழ்ச்சிகள், நதிகள், காடுகள், இயற்கைத் தாவரங்கள்/ வன விலங்குகள்

- நவீன, சமூக, பொருளாதாரத் தேவைகளின்படி அவற்றை விளைதிறனுடையவாறு பயன்படுத்துவதன் முக்கியத்துவம்.
  உதாரணம்: நீர் மின் உற்பத்திக்காக நீர் வீழ்ச்சிகளைப் பயன்படுத்துதல்.
  (சுற்றாடலுக்குத் தீமை ஏற்படாதவகையில் பயன்படுத்துதல். தமது பிரதேசம் சார்பாக, உதாரணங்களை முன்வைக்குக)
- பிரதேசத்தில் பௌதிக வளங்கள் வரையறைப்பட்டமையாதலால், அவற்றைச் சிக்கனமாகப் பயன்படுத்துதலும் பாதுகாத்தலும்.
  உதாரணம் : நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல்.
- மனித வளங்களை இனங்காணல்
  மனிதனின் அறிவாற்றல்களையும் உடல் ரீதியான ஆற்றல், திறன்களையும் அடிப்படையாகக் கொண்டு மனித வளம் உருவாதல்.
  உதாரணம் :

அறிவாற்றல்
- விஞ்ஞானிகள்
- தத்துவ ஞானிகள்
- மருத்துவர்
- எந்திரி
- ஆசிரியர்

உடல் சார்ந்த ஆற்றல்
- கமக்காரர்
- மரவேலையாளி
- கட்டட வேலையாளர் (மேசன்)
- உலோக வேலையாளர்
- தொழிலாளர்

**குறிப்பு** : அறிவாற்றல்கள், உடல் சார்ந்த ஆற்றல்கள் ஆகியவற்றுள் சார்பளவில் கூடுதலான அளவில் பிரயோகிக்கப்படும் ஆற்றல்களை கவனத்திற் கொண்டே மேற்காட்டியவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது)

- எவ்வாறாயினும், அறிவாற்றல் மிக்கோர், உடல் சார்ந்த ஆற்றலுடையோர் ஆகிய இரு பிரிவினரும் தாம் வாழும் பிரதேசத்தின் அபிவிருத்தி மீது பங்களிப்புச் செய்கின்றமை.
- பிரதேசத்தில் காணப்படும் வளங்களைப் பயன்படுத்தி நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தலானது ஒரு பிரசை என்ற வகையில் ஒவ்வொருவரதும் பொறுப்பாகும் என்பதை விளக்குவார்.
- மனித வளங்களை பண்பு ரீதியில் மேம்படுத்துவார்.
  - அதற்காக எடுக்கத்தக்க நடவடிக்கைகள்
    உதாரணம் :
    - பயிற்சி நெறிகளை ஆரம்பித்தல்
    - பல்வேறு திறன்களை விருத்தி செய்வதற்காகப் புலமைப் பரிசில் வழங்குதல்.
    - ஆட்களின் மனப்பாங்குகளை விருத்தி செய்தல்.
- தமது வாழ்க்கையை நடத்திச் செல்வதற்கும் தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்கும் பிரதேச மக்கள் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபடுவார். அவற்றைப் பொருளாதார நடவடிக்கைகள் எனலாம். அவற்றை விவசாயம், கைத்தொழில், சேவைகள் என வகைப்படுத்தலாம். இப்பொருளாதார நடவடிக்கைகள் பெரும்பாலும் பிரதேசத்தின் மனித மற்றும் பௌதிக வளங்களை அடிப்படை யாகக் கொண்டு கட்டியெழுப்பப்படும்.
  உதாரணம் :

  **விவசாயம்**

  நெற்செய்கை, காய்கறிச் செய்கை மீன்பிடிக் கைத்தொழில், விலங்கு வளர்ப்பு, காடு வளர்ப்பு

**கைத்தொழில்**
ஓடு, செங்கல், சீனி, தைத்த ஆடை

**சேவைகள்**
கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, தொடர்பாடல்
(தாம் வாழும் பிரதேசத்தில் காணப்படும் பொருளாதார நடவடிக்கைகள் தொடர்பாகக் கற்றறியச் சந்தர்ப்பமளியுங்கள்.)

**தரவுள்ளீடுகள் :**
- சித்திரம், படங்கள் மாதிரிகள் போன்ற தேவையான உள்ளீடுகளைப் பயன்படுத்துக.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**
- ஒவ்வொரு பாட அலகிற்கும் தயாரித்துள்ள செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களின் துலங்கல்களுக்கும், முன்னேற்றத்திற்கும் ஏற்ப கணிப்பீடு மதிப்பீடுகளை மேற்கொள்க.

**தேர்ச்சி** : பிரதேசத்தில் உள்ள மனித, பௌதிக வளங்களை சமூகத்தின் சிறந்த இருப்புக்குத் துணையாகக் கொள்வார்.

**தேர்ச்சி மட்டம்** : 6.2.2 பிரதேச மக்களுடன் ஐக்கியமாக வாழ்வதற்குரிய ஆயத்தத்தை வெளிக்காட்டுவார்.

**பாடவேளைகள்** : 06

**கற்றற் பேறுகள் :**

- பிரதேச மக்களிடையே ஐக்கியம் தெள்ளத்தெளிவாகத் தென்படும் சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுவார்.
- ஐக்கியமாகச் செயற்படுவதன் முக்கியத்துவத்தை மதித்துக் கருத்துத்தெரிவிப்பார்.

**பாடத் திட்டமிடலுக்குரிய அறிவுறுத்தல்கள் :**

- பிரதேச மக்களிடையே ஐக்கியம் தெள்ளத் தெளிவாகத் தெரியும் சந்தர்ப்பங்கள்
- தமது குடும்பத்தினதும் தமது பிரதேசத்தினதும் மேம்பாட்டுக்காக உறுப்பினர்களின் ஒற்றுமையும் செயலூக்கம் மிக்க ஒத்துழைப்பும் அவசியமாதல்.
- பண்டைக்காலம் முதலே, எமது நாட்டு மக்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஒற்றுமையாகச் செயற்பட்ட விதம் குறித்து மாணவருடன் கலந்துரையாடுங்கள்.
  உதாரணம்: - குளங்கள் கட்டல்
- பிரதேசச் செயலாளர் பிரிவு

  தாதுகோபம் /கோயில் /தேவாலயம் / பள்ளிவாசல் / கமத்தொழில் நடவடிக்கைகள்/ சிரமதானங்கள் / அன்னதான நிகழ்வுகள்
- கூட்டாகச் செயற்படுவதால் கிடைக்கும் பயன்கள்
  - வேலைகளை இலகுவாகவும் துரிதமாகவும் செய்து கொள்ளலாம்
  - ஆட்களுக்கு இடையே நட்புறவை ஏற்படுத்திக் கொள்ளல்
  - ஒற்றுமையும் சகோதரத்துவமும் அதிகரித்தல்
  - சம்பிரதாயபூர்வமான பழக்கவழக்கங்களைப் பேணிவருதல்
  - பணத்தினால் செய்ய முடியாதவற்றை கூட்டு முயற்சியின் மூலம் நிறைவேற்றிக் கொள்ளல்
  - கூட்டாகச் செயற்படுவதால் மகிழ்ச்சியும் நயப்பும் ஏற்படல்

**தரவுள்ளீடுகள் :**

- ஒவ்வொரு பாடத்துக்குரிய பொருத்தமான சித்திரங்கள், படங்கள் படக்குறிப்புகள், காணொளிகள் போன்றவற்றைத் தருவித்துக் கொள்க. அத்துடன் நுளம்பு ஒழிப்பு, சுற்றாடலை அழகுபடுத்தும் நடவடிக்கைகளில் மாணவரை ஈடுபடுத்துக.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- ஒவ்வொரு பாடத்திற்கும் மாணவரின் உயிரோட்டமான பங்குபற்றல், ஒற்றுமை, பொது வேலைக்கான ஈடுபாடு போன்றவற்றைக் கருத்திற் கொண்டு கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்க.

**தேர்ச்சி** : பிரதேசத்தில் உள்ள மனித, பௌதிக வளங்களை சமூகத்தின் சிறந்த இருப்புக்குத் துணையாகக் கொள்வார்.

**தேர்ச்சி மட்டம்** : 6.2.3 தமது நாளாந்த வாழ்க்கைக்கு, பல்வேறு நபர்கள், மற்றும் நிறுவனங்களின் பங்களிப்பு அவசியம் என்பதைப் புரிந்து கொண்டு செயலாற்றுவார்.

**பாடவேளைகள்** : 07

**கற்றற் பேறுகள் :**

- சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள உதவும் வெவ்வேறு ஆட்கள் மற்றும் நிறுவனங்களைக் குறிப்பிடுவார்.
- எமக்கு உதவும் நிறுவனங்கள் மற்றும் தனியாள்களால் ஆற்றப்படும் சேவைகளை வெவ்வேறாகப் பட்டியற்படுத்துவார்.
- பிரதேச மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான தனித்துவமான சங்கங்கள் - கழகங்களினால் ஆற்றப்படும் சேவைகளை மதித்துக் கருத்துத் தெரிவிப்பார்.
- சேவை வழங்குவோரதும் சேவை பெறுவோரதும் கடமைகள், பொறுப்புக்களை விவரிப்பார்.

**பாடத் திட்டமிடலுக்குரிய அறிவுறுத்தல்கள் :**

- சமூகத்தில் வாழும் ஒருவர் தனது தேவைகளைத் தனித்து நின்று நிறைவேற்றிக் கொள்வது சாத்தியமானதல்ல. அதற்கான காரணங்கள்
  உதாரணம் : தேவைகள் சிக்கார்ந்தவையாக இருத்தல். அவற்றை நிறைவு செய்து கொள்ளுதல்.
- வெவ்வேறு தனியாட்களதும் அமைப்புக்களதும் உதவி தேவை
- வெவ்வேறு பணிகளை ஆற்றுவதற்காக சமூகத்தில் தனியாள்களும் அமைப்புக்களும் காணப்படுதல்.
  உதாரணம் : பரஸ்பர உதவிச் சங்கம்
- காணொளிக் காட்சி இலக்கம் 9 - எமக்கு உதவுவோரும் கிடைக்கும் சேவைகளும் பற்றிய விபங்களடங்கிய காட்சியைக் கண்டு களிப்பதற்கு மாணவருக்குச் சந்தர்ப்பம் வழங்குக.
- எமக்கு உதவி புரிவோரும் அவர்களால் ஆற்றப்படும் சேவகளும்
  உதாரணம்:

| | | |
|---|---|---|
| கிராம அதிகாரி | - | வதிவை உறுதிப்படுத்தும் சான்றிதழ் வழங்குதல். |
| சமுர்த்தி அதிகாரி | - | சமுர்த்தி உதவி வழங்குதல் |
| குடும்ப சுகாதார அதிகாரி | - | கர்ப்பிணித்தாய்மாருக்குத் தேவையான ஆலோசனைகள் வழங்குதல் |
| பொதுச்சுகாதாரப் பரிசோதகர் | - | தொற்றுநோய்கள் மற்றும் தொற்றாத நோய்கள் தொடர்பாக அறிவூட்டம் செய்தல். |
| அஞ்சல் பகிர்பவர் | - | கடிதங்கள், பொதிகளை விநியோகித்தல் |
| பொலிஸ் அதிகாரி | - | பொதுமக்களிடையே அமைதியைக் ஏற்படுத்தலும் அதனைப் பேணுதலும் |

- எமக்கு உதவி புரியும் நிறுவனங்களும் அவற்றினால் ஆற்றப்படும் சேவைகளும்
  உதாரணம்:

| | |
|---|---|
| பிரதேசச் செயலாளர் அலுவலகம் | - பிரதேச நிருவாகப் பணிகள் |
| மாவட்டச் செயலாளர் அலுவலகம் | - மாவட்ட நிருவாகப் பணிகள் |
| மாகாண சபை | - மாகாண மட்டத்தில் அரசாங்கத்தின் ஆட்சிப் பணிகளை இலகுபடுத்தல் |
| உள்ளூராட்சி நிறுவனங்கள் | (மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை)<br>- பொது வசதிகள் வழங்குதல் |
| பாடசாலை | - நற்பிரசைகளை உருவாக்குதல் |
| வைத்தியசாலை | - சுகாதார வசதிகள் வழங்குதல் |
| பொலிசு | - சட்டத்தையும் அமைதியையும் காத்தல் |

- பிரதேச வழிபாட்டுத்தலங்கள், சங்கங்கள், கழகங்கள் நிறுவனங்கள் மூலம் ஆற்றப்படும் சேவைகள்

வழிபாட்டுத்தலங்கள்
- பௌத்த சமயம் - பன்சாலை
- இந்து சமயம் - கோயில்
- இஸ்லாம் - மஸ்ஜித்
- கிறித்தவம் கத்தோலிக்கம் - தேவாலயம்

தமது பிரதேசத்தில் காணப்படும் கோயில், தேவாலயம், மஸ்ஜித், பன்சாலைகளை இனங்காணல்.

- வழிபாட்டுத்தலங்களினால் ஆற்றப்படும் சேவைகள்
  - மனிதனின் ஆன்மீக கருணைப் பண்புகளை வளர்த்தல்
    உதாரணம் : - அடக்கம், கட்டுப்பாடு, நல்லொழுக்கம், கருணை, அன்பு, இரக்கம், பொறுமை போன்ற பண்புகளை வளர்த்தல்
    - சகோதரத்துவத்தை வளர்த்தல்
    - அயலவர்க்கு உதவி புரிதல்
    - சமய அறிவை வழங்குதல்
- சமூகத்தின் சமயத் தேவைகளை நிறைவு செய்தல்
  உதாரணம் : - அன்னதான நிகழ்வுகளில்
  - மரணச் சடங்குகளில்
  - திருமண வைபவங்களில்
- ஆலோசனை வழிகாட்டல் வழங்குதல்
  உதாரணம் : முரண்பாடுகளின் போது,
  குடும்பப் பிரச்சினைகளின் போது,
  சங்கங்கள் /கழகங்களை நடத்திச் செல்லும் போது

- சமய நிறுவனங்களுக்கும் சமூகத்துக்கும் இடையே சிறந்த பிணைப்பை ஏற்படுத்தியவாறு சமூகத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்.
- பிரதேசத்தில் சங்கங்கள், கழகங்கள்
  - பிரதேசங்களின், சமூக, பொருளாதார, பண்பாடு மற்றும் சூழல் தொடர்பான பல்வேறு பொதுத் தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்கான சங்கங்கள் - கழகங்கள் தாபிக்கப்பட்டுள்ளமை

உதாரணம்: கூட்டுறவுச்சங்கம், விவசாயிகள் சங்கம், மீனவர் சங்கம், கிராம அபிவிருத்திச்சங்கம், பௌத்தசங்கம், மரண உதவிச் சங்கம், கிறித்தவ சங்கம், இந்து சங்கம், முஸ்லிம் சங்கம், விளையாட்டுக் கழகம், கடனுதவிச்சங்கம், நலன்புரிச்சங்கம் (தமது பிரதேசத்தில் இவ்வாறான சங்கங்களால் கழகங்களால் ஆற்றப்படும் சேவைகளைக் கற்றறியுமாறு மாணவரை வழிப்படுத்துங்கள்)

- பிரதேசத்தில் சங்கங்கள், கழகங்களால் ஆற்றப்படும் சேவைகள்
  - பிரதேச மக்களிடையே ஐக்கியத்தை ஏற்படுத்துதல்
  - ஒற்றுமையை கட்டியெழுப்புதல்
  - நேரத்தைப் பொருளுள்ளவாறு கழிக்க வழிகிடைத்தல்
  - பொதுப்பிரச்சினைகளைக் கூட்டாகச் சேர்ந்து தீர்த்துக்கொள்ள முடிகின்றமை

- சேவை வழங்குவோரதும் சேவை பெறுவோரதும் கடமைகள்

| சேவை வழங்குவோரின் கடமைகள் | சேவை பெறுவோரின் கடமைகள் |
|---|---|
| 1. உரிய வேளையில் சேவையை வழங்குதல். | 1. உச்ச பயன் பெறுதல் |
| 2. வினைத்திறனுடன் செயற்படுதல் | 2. சேவை வழங்குவோருக்கு துணைபுரிதல் |
| 3. சேவையினைக் கருதிச் செயற்படல் | 3. சேவையை மதித்தல் |
| 4. இலஞ்சம், ஊழல் தவிர்த்தல் | 4. உரியவேளையில் தகவல் வழங்குதல் |
| 5. சேவையில் பிசகாதிருத்தல் | 5. நட்புறவுடன் செயற்படல் |
| 6. பக்கச்சார்பின்றிச் செயற்படல் | |
| 7. நட்புறவுடன் செயற்படல் | |

**தரவுள்ளீடுகள் :**

- பிரதேசத்தில் எமக்கு உதவும் பல்வேறு நபர்கள், நிறுவனங்கள் பற்றிக் கலந்துரையாடுவதற்குப் பொருத்தமான வளவாளர்கள், பாடத்திட்டத்தைக் செயற்படுவதற்குப் பொருத்தமான செயற்பாட்டுப் பத்திரங்களைப் பயன்படுத்துக.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- மாணவரின் செயற்பாடுகளைக் கருத்திற் கொண்டு கணிப்பீடு மதிப்பீடுகளை மேற்கொள்க.

## 6.3 நற்பிரசை என்ற வகையில் விருத்தி செய்து கொள்ள வேண்டிய பண்புகள்

தற்காலக் சமூகம் சிக்கார்ந்து செல்லும் அதேவேளை பல்வேறு சமூகப் பிரச்சினைகளையும் அறைகூவல்களையும் எதிர்கொண்டு வருகின்றது.

பாடசாலையினூடாக சமூகத்துக்கு அளிக்கப்படும் எதிர்காலப் பிரசை, அப்பிரச்சினை களையும் அறைகூவல்களையும் வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கும் சமூகத்தின் ஏனைய உறுப்பினர்களுடன் ஒத்துழைத்து வாழ்வதற்கும் தேவையான திறன்களையும் மனப்பாங்கு களையும் நிரம்பப்பெற்ற ஒருவராக இருப்பது அவசியமாகும்.

இவ்வாறான நன்மனப்பாங்குகளும் திறன்களும் நிரம்பப்பெற்ற ஒருவரை உருவாக்குதல் குடியியற் கல்விப் பாடத்தினதும் அப்பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியரதும் பொறுப்பாகும். நற்பிரசையொருவர் விருத்தி செய்துகொள்ள வேண்டிய சில முக்கியமான பண்புகள் இந்த அலகில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

தற்கால அறைகூவல்களை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு, சுய ஒழுக்கம், சட்டத்தை மதிக்கும் தன்மை, நேர்மை, நீதிநியாயம், சூழல்நேயத்தன்மை, தேசாபிமானம் போன்ற பண்புகளை மாணவரிடத்தே விருத்தி செய்வது முக்கியமானதாகும்.

இப்பண்புகளை விருத்தி செய்து கொள்ளலானது, தனியாள் விருத்திக்கும், பொதுவாக சமூகத்துக்கும் முழு நாட்டினதும் அபிவிருத்திக்கும் ஏதுவாகும் விதத்தை வலியுறுத்தி, தரமான கற்றல்-கற்பித்தற் சந்தர்ப்பங்களினூடாக இப்பண்புகளை நடத்தையாக்கிக்கொள்ள வழிகோலுவதே இந்த அலகின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

**தேர்ச்சி** : பிரதேசத்தில் உள்ள மனித, பௌதிக வளங்களை சமூகத்தின் சிறந்த இருப்புக்குத் துணையாகக் கொள்வார்.

**தேர்ச்சி மட்டம்** : 6.3.1 மொழியை மரியாதையாகப் பயன்படுத்துவார்.

**பாடவேளைகள்** : 01

**கற்றற் பேறுகள் :**

- மரியாதையாக, மொழியைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை விளக்குவார்.
- மொழியை மரியாதையாகக் கையாளும் போது கவனஞ் செலுத்த வேண்டிய பண்புகளை வெளிக்காட்டுவார்.
- சமயோசிதமாக மொழியைப் பயன்படுத்துவார்.

**பாடத் திட்டமிடலுக்குரிய அறிவுறுத்தல்கள் :**

- அடக்கமாகவும், முகமலர்ச்சியுடனும், சரியாகவும் ஏனையோரை மதிக்கும் வகையிலும் மொழியைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவம்.
- மொழியை மரியாதையாகப் பயன்படுத்தும் போது கவனஞ் செலுத்த வேண்டிய விடயங்கள்
- மொழியைக் கவர்ச்சிகரமான வகையில் பயன்படுத்துவதன் முக்கியத்துவம்
- பாதகமான சொற்களைப் பயன்படுத்துவதால் ஏற்படத்தக்க தீய விளைவுகளை இனங்காணல்
- மொழியை மரியாதையாகப் பயன்படுத்துதல்
- இடத்துக்கும் சந்தர்ப்பத்துக்கும் ஏற்ற வகையில் மொழியைக் கையாளல்
    - மொழியைப் பகுத்தறிவுடன் பயன்படுத்துவதன் முக்கியத்துவம்
    - சமயத்தலங்கள், வீடு, பாடசாலை, பொது இடங்கள், மங்கல - அமங்கல நிகழ்வுகள், வேறு விசேட சந்தர்ப்பங்கள் போன்றவற்றில் பொருத்தமானவாறு மொழியைக் கையாள்தல்.

**தரவுள்ளீடுகள் :**

- அடக்கமாகவும், முகமலர்ச்சியுடனும் நடத்தல் தொடர்பில் பிரயோகப் பயிற்சியைப் பெறும் வகையில் தனியாக மற்றும் குழுச் செயற்பாடுகளில் மாணவரை ஈடுபடுத்துக.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- பல்வேறு சந்தர்ப்பங்களுக்கமைய மாணவருக்கு கதைப்பதற்கு இடமளித்து அதற்கமைய கணிப்பீடு மதிப்பீடுகளை மேற்கொள்க.

**தேர்ச்சி** : பிரதேசத்தில் உள்ள மனித, பௌதிக வளங்களை சமூகத்தின் சிறந்த இருப்புக்குத் துணையாகக் கொள்வார்.

**தேர்ச்சி மட்டம்** : 6.3.2 ஏனையோரின் கருத்துக்களை மதித்து கலந்துரையாடல் மூலம் இணக்கப்பாட்டுக்கு வருவார்.

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள் :**

- தொடர்பாடற் கருமத்தின் போது உயிரோட்டமாகச் செவிமடுப்பார்
- ஏனையோரின் கருத்துக்களைப் பொறுப்பதன் அனுகூலங்களை விவரிப்பார்.
- நாளாந்தக் கருமங்களின் போது கலந்துரையாடல் மூலம் இணக்கப்பாட்டுக்கு வருவார்.
- விளைதிறனான தொடர்பாடல் மூலம் நல்ல ஆளிடைத் தொடர்புகளை உருவாக்கிக் கொள்வார்.

**பாடத் திட்டமிடலுக்குரிய அறிவுறுத்தல்கள் :**

- விருத்தி செய்துகொள்ள வேண்டிய தொர்பாடல் திறன்கள்
    - உயிரோட்டமாகச் செவிமடுத்தல்
      "உயிரோட்டமாகச் செவிமடுத்தல்" என்பதைச் சுருக்கமாக விளக்குதல்,
    - உயிரோட்டமாகச் செவிமடுத்தலுக்கும், பொதுவான செவிமடுத்தலுக்கும் இடையிலான வேறுபாட்டை விளக்குதல்.
    - உயிரோட்டமாகச் செவிமடுத்தலின் முக்கியத்துவத்தையும், அவ்வாறில்லாத போது ஏற்படத்தக்க பிரச்சினைகளையும் அசௌகரிய நிலைமைகளையும் இனங்காணல்.
    - சமூகத்தில் செயற்படும் போது ஏனையோரின் கருத்துக்களைச் சகித்தல்.
- சரியான கருத்துக்களை மதித்தல்
    - ஏனையோருக்குக் கருத்துத் தெரிவிக்கச் சந்தர்ப்பமளித்தல்
    - பொருத்தமற்ற கருத்துக்களை முரண்பாடின்றி மிதப்படுத்துதல்
    - ஏனையோரின் கருத்துக்களைச் சகிப்பதன் முக்கியத்துவம்
    - நல்ல ஆளிடைத் தொடர்புகளை உருவாக்கிக் கொள்வதற்காக விளை திறனுடைய வகையில் தொடர்பாடல் திறன்களை விருத்தி செய்து கொள்வதன் முக்கியத்துவம்.

**தரவுள்ளீடுகள் :**

- உயிரோட்டமாகச் செவிமடுத்தல், ஏனையோரின் கருத்துக்கு மதிப்பளித்தல், கலந்துரையாடலின் மூலம் ஆளிடைத் தொடர்பைக் கட்டியெழுப்புதல் பற்றிய பிரயோகப் பயிற்சியை வழங்கும் வண்ணம் மாணவரை செயற்பாட்டில் ஈடுபடுத்துக. தொடர்பாடல் விளைதிறனுள்ளவாறு இடம்பெறுவதை விளக்குக.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- செயற்பாட்டிற்கேற்ப மாணவரை ஏனையோரின் கருத்துக்கு மதிப்பளித்தல், தப்பபிப்ராயங்களை முரண்பாடுகளின்றி தீர்த்தல், சிறந்த ஆளிடைத் தொடர்புகளைக் கட்டியெழுப்புதல் போன்றவற்றைக் கருத்திற் கொண்டு கணிப்பீடு மதிப்பீட்டை மேற்கொள்க.

**தேர்ச்சி** : பிரதேசத்தில் உள்ள மனித, பௌதிக வளங்களை சமூகத்தின் சிறந்த இருப்புக்குத் துணையாகக் கொள்வார்.

**தேர்ச்சி மட்டம்** : 6.3.3 நல்ல ஒழுக்கத்துடனும் தன்னடக்கத்துடனும் செயற்படுவர்.

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள் :**

- ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் ஏற்படுத்தும் பொதுப் பண்புகளை விபரிப்பார்.
- ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் ஒருவர் தமது வாழ்க்கைக் காலம் முழுவதிலும் பேணிவருவதன் முக்கியத்துவத்தை விளக்குவார்.
- நாளாந்த வாழ்க்கையில் நல்ல ஒழுக்கத்துடனும் கட்டுப்பாடனும் செயற்படுவார்.

**பாடத் திட்டமிடலுக்குரிய அறிவுறுத்தல்கள் :**

- ஒழுக்கமும் கட்டுப்பாடும் என்பதை விளக்குவார்.
- ஒழுக்கக் கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்காக கற்றல், பயிற்சி, கற்பித்தல் ஆகிய மூன்று அம்சங்களையும் விருத்தி செய்து கொள்ளல் வேண்டும்.
- ஒருவர் தனது வாழ்நாள் முழுவதிலும் ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் பேணிவருவதன் முக்கியத்துவம்.
    - ஒழுக்கமும் கட்டுப்பாடும் தனியாள் விருத்திக்கும் சமூக விருத்திக்கும் பேருதவியாக அமையும். (அமைதிநேய சமூக உருவாக்கல்)
    - ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் பேணுவதை வாழ்கைப் பழக்கமாக்கிக் கொள்வர்.

      உதாரணம் :
        - குடும்பத்தில்
        - பாடசாலையில்
        - தெருக்களில்
        - பொதுச் சொத்துக்களைக் கையாளுகையில்
        - சமூகத்தில்

**தரவுள்ளீடுகள் :**

- ஒழுக்கக் கட்டுப்பாட்டுடன் நடத்தல் பயிற்றுவித்தல், தியானங்களில் ஈடுபடுத்தல், விளையாட்டுக்களில் ஈடுபடல், பிரதான வீதியில் முறையாகச் செல்லல் போன்ற சந்தர்ப்பங்களை உள்ளடக்கிய படங்கள், சித்திரங்களைப் பயன்படுத்துக.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- ஒழுக்கக் கட்டுப்பாட்டு ஏற்படுத்தல், சமூக அபிவிருத்திக்கு ஏதுவாகும் விதத்தை விளக்குவதனூடாக கணிப்பீடு மதிப்பீட்டை மேற்கொள்க.

**தேர்ச்சி** : பிரதேசத்தில் உள்ள மனித, பௌதிக வளங்களை சமூகத்தின் சிறந்த இருப்புக்குத் துணையாகக் கொள்வார்.

**பாடவேளைகள்** : 02

**தேர்ச்சி மட்டம்** : 6.3.4 சமூகத்தில் காணப்படும் செழுமையானவற்றைக் செழுமை யானவை என இனங்கண்டு ஏற்றுக்கொள்வதோடு செழுமையற்ற வற்றை செழுமையற்றவை என இனங்கண்டு மறுதலிப்பார்.

**கற்றற் பேறுகள் :**

- சமூகத்தில் உள்ள செழுமையானவற்றையும் செழுமையற்றவற்றையும் வேறுபடுத்தி இனங்காணப்பார்.
- சமூகத்தில் செழுமையானவற்றுக்கு இசைவாகச் செயற்படுவதற்காகப் பொருத்த மான முறைகளைப் பிரேரிப்பார்.
- சமூகத்தில் செழுமையற்றவற்றை மறுதலிக்கும் விதத்தை விளக்குவார்.

**பாடத் திட்டமிடலுக்குரிய அறிவுறுத்தல்கள் :**

- சமூகத்தில் செயற்படும் செழுமையற்றவற்றை இனங்காணல்.
  உதாரணம்: - கல்வியின்பால் கவனஞ் செலுத்துதல்
  - நல்ல நண்பர்களுடன் பழக்கம்
  - சரியான சுகாதாரப் பழக்கங்களைப் பின்பற்றுதல்
- சமூகத்தின் நல்ல இருப்புக்குரியவற்றைச் செழுமையானவையாக ஏற்றுக்கொள்ளல்.
- சமூகத்தில் செயற்படும் செழுமையற்றவற்றை இனங்கண்டு மறுதலித்தல்.
- சமூகத்தின் சீரழிவுக்குக் காரணமாக அமைபவற்றை செழுமையற்றவை எனக் கருதி மறுதலிக்கப்பழகுதல்.
  உதாரணம்: - தமக்குப் பொருத்தமற்ற ஆட்கள் மற்றும் குழுக்களுடன் பழகுவதைத் தவிர்த்தல்.
  - போதைப் பொருள்களையும், புகைபிடித்தலையும் மறுதலித்தல்.

**தரவுள்ளீடுகள் :**

- மாணவர்கள் நல்லன தீயனவற்றைத் தெளிவாக வேறுபடுத்தி அறிந்து கொள்வதற்கு பொருத்தமான வளவாளருடாக கலந்துரையாடலொன்றை மேற்கொள்க.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- சமூகத்தின் நல்லவை தீயவை பற்றிய கலந்துரையாட வழிப்படுத்தி தீயவற்றை நிராகரிப்பதால் ஏற்படும் நன்மைகள் தொடர்பில் மாணவரின் துலங்கல்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்க.

**தேர்ச்சி** : பிரதேசத்தில் உள்ள மனித, பௌதிக வளங்களை சமூகத்தின் சிறந்த இருப்புக்குத் துணையாகக் கொள்வார்.

**தேர்ச்சி மட்டம்** : 6.3.5 சமூகப் பாரம்பரியங்களையும் சட்டதிட்டங்களையும் மதிப்பார்.

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள் :**

- சட்டதிட்டங்களையும் பாரம்பரியங்களையும் மதிப்பதன் முக்கியத்துவத்தை விளக்குவார்.
- சமூகப் பாரம்பரியங்களையும் சட்டதிட்டங்களையும் பின்பற்றப்பழகிக் கொள்வர்.

**பாடத் திட்டமிடலுக்குரிய அறிவுறுத்தல்கள் :**

- பாரம்பரியங்கள் - அறிமுகம்
- சட்டதிட்டங்கள் - அறிமுகம்
- ஒவ்வொரு சட்டத்துடனும் இணைந்த ஒவ்வொரு தண்டனை இருத்தல்
- சட்டதிட்டங்களையும் பாரம்பரியங்களையும் மதிப்பதன் முக்கியத்துவம்

**தரவுள்ளீடுகள் :**

- சட்டதிட்டங்கள், சம்பிரதாயங்கள் அடங்கிய அட்டைகள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- மாணவர் சட்டதிட்டங்கள், சம்பிரதாயங்கள் மற்றும் அவற்றுக்கு மதிப்பளிப்பதன் முக்கியத்துவம் பற்றி தெரிவிக்கும் கருத்துக்களும், காட்டும் துலங்கல்களுக்குமேற்ப பொருத்தமான நியதிகளைக் கொண்டு கணிப்பீடு மதிப்பீட்டை மேற்கொள்க.

---

**தேர்ச்சி** : பிரதேசத்தில் உள்ள மனித, பௌதிக வளங்களை சமூகத்தின் சிறந்த இருப்புக்குத் துணையாகக் கொள்வார்.

**தேர்ச்சி மட்டம்** : 6.3.6 வளங்களைச் சிக்கனமாகக் கையாள்வார்.

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள் :**

- வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல் வேண்டும் என விளக்குவார்.
- பாடசாலை மாணவர் என்ற வகையில் வள வீண்விரயத்தைத் தவிர்க்கும் உத்திகளைக் கையாள்வார்
- வள வீண்விரயத்தைத் தவிர்ப்பதால் கிடைக்கும் அனுகூலங்களை வரிசைப் படுத்துவார்.
- சுற்றுப்புறச் சூழலில் வளவீண்விரயத்தை குறைப்பதற்காகப் பங்களிப்புச் செய்யத்தக்க சந்தர்ப்பங்களை விளக்குவார்.

**பாடத் திட்டமிடலுக்குரிய அறிவுறுத்தல்கள் :**

- வளங்கள் - அறிமுகம்
    - இயற்கையாகக் கிடைத்த வளங்கள்
      உதாரணம்: சூரிய ஒளி, நீர் வளி, காடுகள், நிலம், கனிய வளங்கள்
    - மனிதனால் உருவாக்கப்பட்ட வளங்கள்
      உதாரணம் : கட்டடங்களும் நிர்மாணங்களும், நீர்ப்பாசன கால்வாய்கள், வாகனங்கள், மேசை, கதிரைகள், உபகரணங்கள்
- சில வளங்கள் பயன்படுத்துவதால் தேய்வாகின்றமை
- வளங்கள் சீராகப் பரம்பியிராமை
- வளங்கள் வரையறைப்பட்டவையாகையால் அவற்றைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல்.
- தமது தேவைகளை/ விருப்புக்களை நிறைவு செய்துகொள்ளும் போது வீண் விரயம் கீழ்வரும் வகையில் வளங்களைப் பயன்படுத்துதல்.
- பாடசாலை மாணவர் என்ற வகையில் வள விண்விரயத்தைத் தவிர்த்து சிக்கனத்தைப் கடைப்பிடிக்கப் பழகிக்கொள்ளல்.
  உதாரணம்: நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல்
  தேவையற்ற விதத்தில் மண்ணைப் பயன்படுத்துவதைத் தவிர்த்தல்
- வள வீண்விரயத்தைத் தவிர்ப்பதன் முக்கியத்துவம்
    - பணம் மீதமாதல்
    - வளங்கள் மீதமாதல்
    - சுற்றாடல் சார்ந்த இழப்பு இழிவாதல்
- சட்டதிட்டங்களையும் பாரம்பரியங்களையும் மதிப்பதன் முக்கியத்துவம்

**தரவுள்ளீடுகள் :**

- பாடத்தைத் திட்டமிடும் போது உரிய சாதனங்களை மாணவர்களுக்கு வழங்குக.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதன் முக்கியத்துவம் பற்றிய சிறிய வாக்கியங்களை எழுத மாணவர்களை வழிப்படுத்தி அதன் மூலம் கணிப்பீடு மதிப்பீடுகளை மேற்கொள்க.

**தேர்ச்சி** : பிரதேசத்தில் உள்ள மனித, பௌதிக வளங்களை சமூகத்தின் சிறந்த இருப்புக்குத் துணையாகக் கொள்வார்.

**தேர்ச்சி மட்டம்** : 6.3.7 பொதுச் சொத்துக்களைப் பொறுப்புடன் பாதுகாப்பார்.

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள் :**

- பொதுச் சொத்துக்களை ஆக்குவதற்கும் அவற்றைப் பராமரிப்பதற்கும் அரசு பாரிய அளவில் செலவு செய்கின்றமையை ஏற்று விடயங்களை விளக்குவார்.
- பொதுச் சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக எடுக்கத்தக்க நடவடிக்கைகளை விளக்குவார்.
- பொதுச் சொத்துக்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் குறித்து பொதுமக்களுக்கு அறிவூட்டம் செய்வார்.
- பொதுச் சொத்துக்களை தமது தேவைகளின் போது பயன்படுத்துவதோடு அவற்றைப் பாதுகாப்பார்.

**பாடத் திட்டமிடலுக்குரிய அறிவுறுத்தல்கள் :**

- பொதுச்சொத்துக்கள் - அறிமுகம்
  உதாரணம்: பாடசாலையில் காணப்படும் வளங்கள், பெருந்தெருக்கள், புகையிரதம், பேருந்து
- பொதுச் சொத்துக்களின் இயல்புகள்
- பொதுச் சொத்துக்களை ஆக்குவதற்காகவும் தாபிப்பதற்காகவும் இலாப நோக்கின்றி அரசு பாரிய அளவில் செலவு செய்கின்றமை குறித்து மாணவரின் கவனத்தை ஈர்த்தல்
- பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தலும் அதன் முக்கியத்துவமும்.
  - பொதுச் சொத்துக்களைப் பாதுகாப்பதற்காகப் பின்பற்றுதலுக்கான வழி வகைகள்

**தரவுள்ளீடுகள் :**

- பாடத்தைத் தொடங்கும் முன்பு மாணவரும் பொதுச் சொத்துக்கள் பற்றிய படங்கள், சித்திரங்கள் போன்றவற்றை கொண்டு வருமாறு கூறவும். அவற்றைத் தரவுள்ளீடுகளாகப் பயன்படுத்தவும்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள். :**

- பொதுச் சொத்துகளைப் பாதுகாக்க நாம் செய்ய வேண்டியவை எனும் தலைப்பில் சிறு கட்டுரையொன்றை அன்றேல் உரையாற்றச் சந்தர்ப்பமளித்து அதன் மூலம் கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்க.

**தேர்ச்சி** : பிரதேசத்தில் உள்ள மனித, பௌதிக வளங்களை சமூகத்தின் சிறந்த இருப்புக்குத் துணையாகக் கொள்வார்.

**தேர்ச்சி மட்டம்** : 6.3.8 சுற்றாடற் காப்பினூடாக பேண்தகு அபிவிருத்திக்காக உயிரோட்டமாகப் பங்களிப்புச் செய்வார்.

**பாடவேளைகள்** : 03

**கற்றற் பேறுகள் :**

- தமது அயற்சூழலைப் பாதுகாப்பதற்காகப் பங்களிக்கத்தக்க விதத்தைக் குறிப்பிடுவார்.
- சுற்றாடல் பாதுகாப்பின் முக்கியத்துவத்தையும் அதன் மூலம் கிடைக்கும் அனுகூலங்களையும் விவரிப்பார்.
- தாமும் சூழலின் ஒரு பகுதியே என்பதைக் கருத்திற்கொண்டு செயற்படுதல் வேண்டும் என கருத்துத் தெரிவிப்பார்.
- சுற்றாடல் வளங்களை எதிர்காலச் சந்ததிக்காகப் பாதுகாத்து வைப்பதன் முக்கியத் துவத்தை விளக்குவார்.

**பாடத் திட்டமிடலுக்குரிய அறிவுறுத்தல்கள் :**

- சுற்றாடல் - அறிமுகம்
- எமது இருப்புக்கு சூழல் அவசியமானது
- மனிதனும் சுற்றாடலின் ஒரு பகுதியாகும்
- மனிதச் செயற்பாடுகள் காரணமாக பௌதிகச் சூழலில் ஏற்படும் பாதிப்புக்கள்
- சுற்றாடல் காப்பின் முக்கியத்துவமும் எதிர்காலச் சந்ததிக்காக சுற்றாடலைப் பதுகாத்தலின் அவசியமும்.

**தரவுள்ளீடுகள் :**

- பாடத்தை மாணவர்கள் அனுபவம் பெறும் வகையில் சூழல்சார் செயற்பாடாக மேற்கொள்கையில் உரியவற்றை தரவுள்ளீடாகப் கொள்க.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவம் பற்றிய சுவர்ப்பத்திரிகைக்கு ஆக்கமொன்றை யெழுவதற்கோ வேறும் பொருத்தமான செயற்பாட்டிலோ மாணவரை ஈடுபடுத்தி அதற்கமைய கணிப்பீடு மதிப்பீட்டை மேற்கொள்க.

**தேர்ச்சி** : பிரதேசத்தில் உள்ள மனித, பௌதிக வளங்களை சமூகத்தின் சிறந்த இருப்புக்குத் துணையாகக் கொள்வார்.

**தேர்ச்சி மட்டம்** : 6.3.9 சுதேசத்துவத்தைப் பெருமையுடன் மதிப்பார்.

**பாடவேளைகள்** : 03

**கற்றற் பேறுகள் :**

- சுதேச பண்பாட்டு அருஞ்செல்வங்கள் தொடர்பான விபரங்களை பெருமையுடன் முன்வைப்பார்.
- சுதேச உற்பத்திகள், சுதேசப் பயிர்கள் தொடர்பான தகவல்களைச் சேகரிப்பார்.
- சுதேசத்துக்குரியவற்றை மதித்து, அதுதொடர்பான விவகாரங்களைப் பெருமையுடன் முன்வைப்பார்.
- சுதேச அருஞ்செல்வங்களைப் பாகாப்பதற்காகப் பங்களிப்புச் செய்யத்தக்க விதத்தை விளக்குவார்.

**பாடத் திட்டமிடலுக்குரிய அறிவுறுத்தல்கள் :**

- சுதேசத்துக்குரியவை - அறிமுகம்
- சுதேச பண்பாடு
- சுதேச வளங்கள்
- சுதேச உற்பத்திகள்
- சுதேசப் பயிர்கள்
- சுதேச தொழினுட்பம்
- சுதேசத்துக்குரியவற்றை மதித்தலின் முக்கியத்துவம்
- சுதேசத்துக்குரியவற்றை பாதுகாத்தல்

**தரவுள்ளீடுகள் :**

- சுதேசப் பண்பாட்டு அருஞ் செல்வங்கள், தேசிய உற்பத்திகள், பயிரினங்கள், மரபுரிமைகள் ஆகியவற்றைக் காண்பிக்கும் சித்திரங்கள், படங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்துக.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- சுதேசத்துவத்தை பெருமையுடன் போற்றுவதன் முக்கியத்துவம் பற்றி மாணவரின் துலங்களுக்கேற்ப கணிப்பீடு மதிப்பீடுகளை மேற்கொள்க.

| | | |
|---|---|---|
| **கணினிப் பதிப்பு** | : | திருமதி என். நந்தனி - தேசிய கல்வி நிறுவகம்<br>திருமதி நாதியா ஹிஸான் - தே.க.நி.<br>திருமதி எம்.என்.எப். றிஹானா - தே.க.நி. |
| **அட்டைப் படம்** | : | திரு.ரவீந்திர தேனுவர, விரிவுரையாளர்<br>அழகியற் கல்வித்துறை<br>தேசிய கல்வி நிறுவகம் |
| **ஏனைய உதவிகள்** | : | செல்வி.ஏ.எல்.எஸ்.பி.அத்தபத்து<br>தேசிய கல்வி நிறுவகம்<br><br>திருமதி.எஸ்.எஸ்.ஜயவர்தன<br>தேசிய கல்வி நிறுவகம்<br><br>திரு.ஆர்.எம்.ருபசிங்ஹ<br>தேசிய கல்வி நிறுவகம்<br><br>திரு.பியதிலக்க பெர்னாந்து<br>தேசிய கல்வி நிறுவகம் |